Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 01 வெள்ளிக்கிழமை (17.07.2015) பக்கங்கள் 20 ஓசை – 289

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# மனித நேயம் எமது மூலதனம்



(யாழ்ப்பாணம்)

உண்மையான, நேர்மையான மனிதநேயம்தான் எமது அரசியலின் மூலதனம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஆறுகால்மடம், அரசடி ஞான வைரவர் கோவிலுக்கு அருகாமையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, இங்கு வருகை தந்திருக்கும் உங்களில் பலருக்கு நிரந்தரக் காணிகளோ, காணி உறுதிகளோ இல்லாத நிலையில் வாழ்வாதாரம் மற்றும் வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படாத நிலை இருந்து வருகிறது.

அந்த வகையில், மக்களாகிய நீங்கள் எமக்கு அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அரசியல் பலம் தருகின்ற போது உங்களுடைய தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் யாவும் உரிய கால்ததில் தீர்த்து வைக்கப்படும்.

அதுமட்டுமன்றி உங்களுக்கு வளமானதொரு எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுப்பதுடன், வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் விஸ்திரப்படுத்தக் கூடியதான ஒரு சூழலையும் நாம் உருவாக்கித் தருவோம்.

இந்நிலையில், நீங்கள் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தவறான அரசியல் தலைமைகளைப் புறந்தள்ள வேண்டியது அவசியமானது என்று சுட்டிக்காட்டிய டக்ளஸ் தேவானந்தா,

தவறான அரசியல் தலைமைகள் மீண்டும் எமது சமூகத்தைக் கையேந்தும் நிலைக்கே இட்டுச்

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதி அமைச்சர்கள் மூவர் இராஜினாமா

(கொழும்பு)

மூன்று பிரதி அமைச்சர்கள் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சுதர்ஷினி பெனாண்டோ புள்ளே, லசந்த அழகியவன்ன மற்றும் எரிக் வீரவர்த்தன ஆகியோரே பிரதி அமைச்சர் பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

## பொலிஸ் பொறுப்பதிகாரி திடீர் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

சாரதியை ஓரினச் சேர்க்கைக்கு உட்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு தெல்லிப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று தற்காலிக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

தனது வாகனத்தின் சாரதியை ஓரினச் சேர்க்கைக்கு உட்படுத்தினாரென குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் இவர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (25)

## மத்திய குழுவைக் கூட்ட மைத்திரியிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்டுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க கட்சியின் பிரதிநிதிகள் சிலர் தீர்மானித்துள்ளனர்.

தற்போதைய அரசியல் நிலை குறித்து தீர்மானங்கள் எடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுமுன்தினம் இரவு கூட இருந்ததாக அதன் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

எனினும் கட்சியின் தலைவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## சீன கடன் திட்டங்கள் மேலும் தொடரும்

### ராஜித சொல்கிறார்

(கொழும்பு)

சீனாவிடம் பெறப்பட்ட கடன் திட்டங்களை இரத்துச் செய்யும் திட்டம் எதுவும் அரசாங்கத்துக்கு கிடையாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன,

சீனாவிடம் பெறப்பட்ட நடைமுறையில் இருக்கும் கடன் திட்டங்களை இரத்துச் செய்யும் திட்டம் எதுவும் அரசாங்கத்துக்கு கிடையாது. இந்தக் கடன்கள் நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானவை.

சீனக் கடன்கள் தொடர்பான விதிமுறைகள் தொடர்பாக மீள் இணக்கப்பாடு செய்து கொள்கிறோமே தவிர, இந்தக் கடன்களில் இருந்து விடுபடும் திட்டம் ஏதும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சீனாவிடம் கூடுதல் வட்டியில் பெறப்பட்ட கடன்களை அடைப்பதற்கு அரசாங்கம், ஏனைய நாடுகளிடம் கடன் வாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க கண்காணிப்பாளருக்கு அழைப்பு இல்லை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அமெரிக்க கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிகிறது.

எதிர்வரும் ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்க மூன்று வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் வரவுள்ளன.

தேர்தல்கள் ஆணையாளர் விடுத்த அழைப்புக்கு அமையவே,

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். தேர்தல் மாவட்டம் வெளியாகியது விருப்பு எண்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி வேட்பாளர்களுக்கான விருப்பு வாக் குக்கான எண்கள் தொடர்பான விபரம் வெளியாகியுள்ளது. இதன்படி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கான விபரம் வருமாறு,

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் இலக்கம் 01**

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு அமைப்பாளர் இராமநாதன் ஐங்கரன் இலக்கம் 02**

**சமூக சேவையாளர் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் இலக்கம் 03**

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா இலக்கம் 04**

**யாழ். மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா இலக்கம் 05**

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் இலக்கம் 06**

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் இலக்கம் 07**

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் இலக்கம் 08**

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் மேற்கு அமைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் இலக்கம் 09**

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர் இலக்கம் 10**





வடமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியர்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் கொழும்பு ஆயுர்வேத திணைக்களத்தினது ஏற்பாட்டில் யாழ். லங்கா சித்த ஆயுர் வேத மருத்துவக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற கருத்தரங்கில் சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி. சியாமா துரைரத்தினம் உரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (05)

## முதியோருக்கான கொடுப்பனவு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கான 2000 ரூபா கொடுப்பனவு நேற்று முன்தினம் முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

இக்கொடுப்பனவானது மாதாந்தம் 15ஆம் திகதி முதல் 7 நாட்களுக்கு வழங்கப்படும் எனவும் இதனை தவறாது பெற்றுக் கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மக்கள் சேவையைப்பலப்படுத்த நாடெங்கும் உள்ளூராட்சி வாரம் முன்னெடுப்பு

சிறப்பான சேவையினை வழங்குவதன் மூலமே நாட்டிற்கு உயர்வு எனும் தலைப்பில் நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி வாரம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முன்னெடுக்கப்படவுள்ளது என உள்ளூராட்சி அரசாங்க நிர்வாக ஜனநாயக அமைச்சு விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு தழுவிய உள்ளூராட்சி சபைகளுக்கும் இவ் அறிவிப்பை அனுப்பி வைத்துள்ளது.

இவ் ஆண்டுகான உள்ளூராட்சி வாரம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை மக்கள் சேவையை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படவுள்ளது.

செப்ரெம்பர் 7ஆம் திகதி முதலாம் நாள் நடமாடும் சேவை தினமாக முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இரண்டாம் நாள் உள்ளூராட்சி சபைகள் வருமானத்தை உழைப்பதற்கான வருமான மேம்பாடு தினமாகவும், மூன்றாம் நாள் சுகாதார சேவைகளை முன்னிறுத்தி துப்புரவேற்பாட்டு தினமாகவும், நான்காம் நாள் பொதுமக்கள் பயன்பாட்டு தினமாகவும், ஐந்தாம் நாள் பசுமையை முன்னிறுத்தி மரம் நாட்டு விழாவினை முன்னெடுக்கவுள்ளதுடன், ஆறாம் நாள் கல்வி மற்றும் நூல் நிலைய அபிவிருத்தி தினம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வாரத்தின் ஏழாம் நாளாகிய இறுதி நாளில் விருது மற்றும் பரிசளிப்பு விழாக்களை உள்ளூராட்சி வார இறுதி பெருவிழாவாக முன்னெடுக்கவுள்ளது.

இவ் உள்ளூராட்சி வாரத்தினை உள்ளூராட்சி சபைகள் அப்பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்துவதாக முன்னேற்றுவதாக அமைய வேண்டுமென அரசாங்க நிர்வாக உள்ளூராட்சி அமைச்சு, நாடு தழுவிய ரீதியிலுள்ள உள்ளூராட்சி மன்றத் தவிசாளர் - செயலாளர்களைக்கோரியுள்ளது.(92)

## ஆடிப்பிறப்பு பண்பாட்டு விழா

(பச்சிலைப்பள்ளி)


வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகம் நடாத்தும் ஆடிப்பிறப்பு பண்பாட்டு விழா இன்று பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திருமதி பரமோதயன் ஜெயராணி தலைமையில் முற்பகல் 11.00 மணிக்கு இடம் பெறவுள்ள இப்பண்பாட்டு விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகம் அழைப்பு விடுத்துள்ளது.

## உதவி வழங்கல்

(கரவெட்டி)

மத்திய சமூக சேவைகள் அமைச்சு நான்கு குடும்பங்களுக்கு தையல் தொழிலை மேற்கொள்ள தலா 20,000 ரூபா வீதம் வழங்கியுள்ளது. இவர்கள் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ வேண்டுகோள் விடுத்துள்ளார். பி. சுதர்சினி, (கரணவாய், மேற்கு), ஐ. செல்வராணி (இமையாணன் கிழக்கு), எஸ். கலாஜினி (அல்வாய்), ஜெ. வனிதா (இமையாணன் கிழக்கு) இவர்களே உதவி பெறத் தகுதியுடையவர்களாவர்.



பிரிட்டிஸ் கவுன்சிலின் அனுசரணையுடன் 2014, 2015ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சர்வதேச பாடசாலைகளுக்கான விருது வழங்கல் நிகழ்வில் யாழ்மாவட்டத்தில் முதல் நிலையினையும், தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களிற்கும் தெரிவு செய்யப்பட்ட யா/புத்தகலட்டி ஸ்ரீவிஸ்னு வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வெற்றிக் கேடயம், சான்றிதழ்கள் பெற்றுள்ளதைக் காணலாம். (03)

## கஞ்சா விற்பனை; சந்தேக நபர் கைது

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சாட்டி கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபரொருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்ய முற்பட்டவேளை அவர் தப்பியோடியுள்ளார்.

கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குறித்த நபர் அவ்விடத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். இதன்போது அவருடன் சம்பந்தப்பட்ட நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களில் மூவர் புத்தளத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இவர்களிடமிருந்து பீடியில் சுற்றப்பட்ட நிலையில் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டதோடு, இவர்களிடமிருந்து கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (18)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்கைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள் - 2012

**01) கலைமாணி பகுதி - II - 2012**
**02) சிறப்புக் கலைமாணி பகுதி - I - II&III-2012**

மேற்படி கலைமாணி பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 07-08-2015 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட் அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 500/= ஆகும். யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 300/=இற்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ. மீ. அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்கைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தினை www.jfn.ac.lk/codl எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்,**
**14-07-2015**

(C/3879)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கியவர் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ்

## முன்னாள் வடமாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று ஆசிரியர் பயிற்சியைப பெறுகின்றவர்கள் நான் மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்திலேயே ஆசிரிய உத்வியாளர்களாக நியமனம் பெற்றனர். வன்னியில் கல்விக் கழக ஆசிரியர்களாக நியமனம் பெற்ற இவர்களை தொண்டர் ஆசிரியர்கள் என்ற அடிப்படையில் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதற்கு பிரதான காரணம முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரே ஆவார். அவரும் அவருடன் இணைந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமாகிய கே.என். டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைப் பத்திரத்தைத் தாக்கல்செய்தமையாலேயே தொண்டர் ஆசிரியராக இருந்த எல்லோரும் ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டனர் என்று தெரிவித்தார் முன்னாள் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் கலாசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முன்னாள் கல்விப பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், மீன்பிடி டிப்ளோமாச் செய்தவர்களை உடற்கல்வி அலகில் டிப்ளோமாச் செய்தவர்களை ஆசிரியர்களாக உள்வாங்குவதற்கு மத்திய கல்வி அமைச்சின் அனுமதி இருக்கவில்லை. ஆனாலும் அன்று அமைசசர் டக்ளஸ் எடுத்த பெருமுயற்சியால் அன்றைய ஆளுநரைச் சம்ம திக்க வைத்து உடற்கல்வி டிப்ளோமாதாரர்களுக்கு மாகாண அரசாங்கத்தின் ஊடாக ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னர் இவ்வாறு செய்ய முடியவில்லை. இந்த உண்மைகளை நீங்கள் எல்லோரும் உணரவேண்டும்.

எமது பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வியின் பெறுபேறு வீழ்ச்சிகண்டுள்ளது. கிழக்கு மாகாணத்தை விடவும் நாம் தாழ்ந்த நிலையில் உள்ளோம். அதிகளவு பல்கலைக்கழக அனுமதி வாய்ப்பைக் கொண்ட விஞ்ஞானத் துறையில் கல்வி கற்போருடைய எண்ணிக்கை மிகவும குறைவானதாகவுள்ளது. இந்நிலைமையை மாற்றுவதற்கு ஆசிரியர்கள் முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக வன்னிப் பிரதேசத்தின் கல்வித் தேவைவளை ஆசிரியர்கள் நிறைவேற்ற வேணடும். எதிர்வரும் மார்ச் மாதத்தில் பயிற்சியை முடித்து உங்களது சொந்த இடங்களான வன்னிப் பிரதேசத்திற்குச் செல்லும் போது முழுநிறைவான ஆசிரியர்களாகச் சென்று சேவை யாற்றுங்கள். அப்படி உங்களை முழுமைப்படுத்த இத்தகைய விழாக்கள் துணை செய்யும் என்றார்.

கலாசாலையின் அதிபர் வீ.கருணலிங்கம் வாழ்த்துரை வழங்கினார். ஆசிரிய மாணவர்களின் நாடங்கள் மேடையேற்றப்பட்டன.

# காணவில்லை



(புங்குடுதீவு)

புங்குடுதீவைச்சேர்ந்த விசுவலிங்கம் நிஷாந்தன் (வயது 21) என்பவர் வேலை நிமித்தமாக வவுனியாவுக்கு சென்ற இடத்தில் 22.04.2015 இல் இருந்து காணமற்போயுள்ளார்.

இது தொடர்பாக இவரது உறவினர்களினால் வவுனியா பொலிஸ நிலையத்தில் 22.04.2015 முறைப்பாடு செய்த நிலையிலும் இவர் தொடர்பாக எந்தவித தகவலும் இதுவரையும் கிடைக்கப் பெறவில்லை. என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (40)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு ரூபா 42,000 அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனங்களை செலுத்திய சாரதிகள் நால்வருக்கு 42,000 ரூபாய் அபராதம் விதித்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன், நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தார் என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமம் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வெவ்வேறு தினங்களில் வாகனம் செலுத்திய நால்வர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சாரதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. ஒவ்வொரு வழக்கும் தனித்தனியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சந்தேக நபர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்ட னர். இதன் போது நீதவான் தலா 10,500 ரூபாய் அபராதம் விதித்தார்.

# வருடாந்த மஹோற்சவம்

சாவகச்சேரி, கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலய வருடாந்த மஹோற்சவ விழா இன்று ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளன. ஆடிப்பிறப்பு தினமான இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றமும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம் பெறவுள்ளது. கொடியேற்றம், தேர், தீர்த்தம் ஆகிய உறசவங்கள் காலை 7 மணிக்கும், ஏனைய திருவிழாக்கள் காலை 8 மணிக்கும் இரவு திருவிழாக்கள் பிற்பகல் 5 மணிக்கும் ஆரம்பமாகும்.

இம்மஹோற்வச காலத்தில் முன்பள்ளிச் சிறார்களுக்கான சித்திரப்போட்டி, இசை நிகழ்வுகள், நடன நிகழ்வு, சிறப்புப் பேச்சுக்கள், கதை கூறல், இசைக்கச்சேரி, சிறுவர்களுக்கான முக வர்ணணை, நாடக நடனம், நாதஸ்வர கச்சேரி, முகவை யாழ்.இசைக்கச்சேரி விழிப்புல வலுவிழந்தோரின் இசைக்கச்சேரி மற்றும் பரிசில்வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன. (இ)

# ஆடிப்பிறப்பு நிகழ்வும் குறும்பட வெளியீடும்

வேலணை பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் ஆடிப்பிறப்பு பண்பாட்டு விழாவும், குறும்பட வெளியீட்டு விழாவும் இன்று வேலணை பிரதேச செயலக பிரதான மண்டபத்தில் மு.ப. 10.30 மணிக்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செந்தில்நந்தனன் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் வேலணையூர் சிறிதரன் இயக்கிய ஒருவழிப்பாதை குறும்பட வெளியீட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (21)

# சட்டமா அதிபர் விஜயதிலக பருத்தித்துறை நீதிமன்றுக்கு விஜயம்




பருத்தித்துறை நீதிமன்றுக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட சட்டமா அதிபர் யுவன்யன் விஜயதிலக பருததித்துறை நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தனது தந்தை நீதிபதியாக பணியாற்றிய நீதிமன்றுக்கு வருகை தருவதில் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக யுவன்யன் விஜயதிலக பருத்தித்துறை நீதிமன்றில் தெரிவித்தார் .

கோட்டு வாசல் அம்மன் ஆலயத்தில் பிரார்த்தனைகளை நிறைவு செய்து பான்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்ட சட்டமா அதிபர் மேலதிக சொலிசிட்டர் லிவேரா, பிரதி சொலிசிட்டர் ஜெனரல், மற்றும் அரச சட்டத்தரணி ஆகியோர், பருத்தித்துறை நீதிமன்றத்தை பார்வையிட்டதுடன், யாழ், மற்றும் பருத்தித்துறை சட்டத்துறை, நீதித்துறையினருடன் தமது உறவுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

தமக்கு மிகவும் உற்சாகமான ஆச்சரியம் நிறைந்த வரவேற்பு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினாலும், பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தினாலும் அளிக்கபட்டதாக குறிப்பிட்ட சட்டமா அதிபர் நீதிமன்ற நடவடிக்கைகளில் தமது பங்களிப்பின் தேவைப்பாடு குறித்து எழுத்து மூலமாக அளிக்குமாறு குறிப்பிட்டதுடன் தம்மாலான அனைத்து ஒத்துழைப்பு மற்றும் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார். மேலும் சட்டமா அதிபருக்கு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினாலும் சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்களினாலும் நினைவுச் சின்னமொன்று வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (18)



நல்லூர் ரோட்டரி கழகத்தின் 3 ஆவது பதவியேற்பு நிகழ்வு ரீல்கோ ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. இதில் கொழும்பு கிழக்கு ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர் கபிலன் தெல்லிப்பளை பிரதேச செயலர் சிறிமோகன் ஆகியோர் மங்கள விளக்கு ஏற்றுவதையும் முன்னாள் மாவட்ட ஆளுநர் கௌரி ராஜன் முன்னிலையில் 2015/16 இற்கான தலைவராக பதவியேற்ற ஜனார்த்தன் முன்னாள் தலைவர் ரவினதாசிடம் இருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்வதையும் காணலாம்.

தன்னம்பிக்கையுடன், செயல்படுங்கள் அனைத்தையும் துணிச்சல்தான் சாதிக்கும். - டாக்டர்ஜான்சன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கூட்டமைப்பின் 'கோமாளி' முகங்கள்!

தமிழ்த் தேசிய உணர்வுள்ளவர்கள் எல்லாரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்குகளைப் போட வேண்டும் என்று கேட்கிறார்கள் கூட்டமைப்பினர்.

கூட்டமைப்பின் தமிழ்த் தேசியம் என்ன மாதிரியானது என்ன குணவிசேசங்களைக் கொண்டது என்று யாருக்காவது விளங்கப்படுத்திச் சொல்ல முடியுமா? கூட்டமைப்பிலுள்ள யாருடைய தமிழ்த் தேசியத்தை கூட்டமைப்பின் தமிழ்த் தேசியமாய் கருதுவது?

"மைத்திரி – ரணிலுடன் கதைத்துத் தீர்வை எடுக்கப்போகிறோம்" என்கிற நல்லிணக்க அரசியலின் பாதைதான் இன்று தமிழ்த் தேசியத்தின் பாதை என்பதாக அடையாளப்படுத்துகிறார்கள் சம்பந்தனும் சுமந்திரனும்.

ஆனால், குறிப்பாக சுமந்திரன் துரோகப் பாதையில் போகிறார் என்றும், தமிழ்த் தேசியத்தின் அபிலாசைகளை ஒருபோதும் சிங்களக் கட்சிகளால் விட்டுத்தரவே முடியாது என்றும், அது இன்னும் பல தேர்தல்களுக்கு சர்வதேசத்துக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கப்பட வேண்டிய விஷயம் என்றும் 'நீண்ட பயணம்' நடக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அகிம்சைப் போராளிக்கு அகிம்சைப் போராளியாகவும் ஆயுதப் போராளிக்கு ஆயுதப் போராளியாகவும் வாயால் மாறிமாறி வடிவமெடுக்கக் கூடிய மாவையாரின் அறிக்கைகளோ தமிழ்ச் சமூகத்தின் அறிவு மட்டம் இன்னும் தனது மட்டத்திலேயே இருப்பதாக நினைத்துக்கொண்டு, தமிழ்த் தேசியம் என்பது கழுத்து நரம்புகள் புடைக்க எதையாவது அவ்வப்போதைக்கு முழங்குதல் என்று நாளும் பொழுதும் சிங்கள அரசுக்குச் சவால்களை வெளியிட்டு வருகிறார்.

செல்வமும் சித்தார்த்தனும் அலாஸ்கா வந்துவிட்ட ஒட்டகங்கள் போல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய தமிழ்த் தேசியத்தினுள் என்னென்ன மாதிரியான 'ஐட்டங்கள்' அடங்குகின்றன என்று சரிவரப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக, 'பே' எனப் பின்தொடர்கிறார்கள்.

சீமானுக்குப் போட்டியாக இங்கே "தேசியத் தலைவர் பார்ட் ரூ" நடித்துக் கொண்டிருக்கக் கூடிய சிவஞானம் சிறீதரனோ, கூட்டமைப்பிலுள்ள மற்றவர்கள் யாரும் அசல் தமிழ்த் தேசியவாதிகள் ஆகமுடியாது என்ற உண்மையை தனது இணையத் தளங்கள் வழியாக நிறுவியபடி இருக்கிறார்.

இப்போதும் புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தேசியத் தலைவராக ஏற்றுக்கொள்ள மாட்டாத கூட்டமைப்பு உறுப்பினர்களை எப்படித் தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதிகளாகச் சொல்ல முடியும்? என்ற அவரது அடிப்படைக் கேள்விக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே எவருக்கும் பதில் சொல்லத் திராணியில்லை.

தெற்கின் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்துவ அட்டையை இப்போதும் தம்வசம் கொண்டிருக்கக் கூடிய, தமிழ்க் கூட்டமைப்பின் பத்திரிகையை நடத்தும் நபர்கூட விறுவிறுப்புச் செய்திகளூடாக ஒருவகை 'வீரமிகு' தமிழ்த் தேசியத்தை மக்களுக்குப் புகட்டிக் கொண்டிருக்கிறார்.

நம் சிவாஜிலிங்கமும் ஒருவகைத் தமிழ்த் தேசியத்தின் வீரனாகத்தான் மாகாண சபைக்குத் தெரிவானார் என்பதை மறுக்க முடியாது. 2010 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவின் வெற்றிக்கு உதவுவதற்கு, இந்தியாவிலிருந்து "அவரது மொடல்" தமிழ்த் தேசியம் ஏராளம் பொருட்செலவில் இறக்கப்பட்டது எல்லோருக்கும் தெரியும்.

இப்போது கூட, குருநாகல் வரை சென்று தமிழ்த் தேசியத்தை வீறுடன் முழங்குவதன் மூலம் மறுதலையாக சிங்கள தேசியத்தின் வெற்றிக்கு மட்டுமே உழைக்கக்கூடிய கடமை உணர்வு மிக்க "வாங்கின காசுக்கு கூவும்" தமிழ்த் தேசியம் அது!

கூட்டமைப்பின் எந்தத் தமிழ்த்தேசிய 'மொடலுக்கு' தமிழ்மக்கள் வாக்களிப்பது?.... இந்த எல்லாத் தேசியங்களையும் அப்படியே 'பலன்ஸ்' பண்ணிப் போய்க் கொண்டிருப்பதுதானே அவர்களது ஒரே அரசியல்!

- ஆசிரியர்

### தேர்தல் நடவடிக்கைகளுக்கு

# அரச வாகனங்களை பயன்படுத்தினால் ஒரு இலட்சம் ரூபா நிதி அறவீடு

(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரசாங்க வாகனங்களை பயன்படுத்தும் பிரதமர் உட்பட அனைத்து அமைச்சர்களும் குறித்த அமைச்சுக்கு மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்ற தீர்மானத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் டாக்டர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தச் செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

"2015 நாடாளுமன்றத் தேர்தல் காலப்பகுதியில் பிரதமர் உட்பட ஏனைய அமைச்சர்கள் மூலம் தமது கட்சியின் அல்லது தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச வாகனங்களைப் பயன்படுத்தினால், குறித்த அமைச்சிற்கு அதற்கான தொகையை வழங்க வேண்டும்.இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் மற் றும் கட்சியின் செயலாளர்களுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்கமைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் யோசனைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், மாகாணசபையமைச்சர்கள், என யாரும் அரச வாகனங்களைப் பயன்படுத்தினால் ஒரு இலட்சம் ரூபாய் செலுத்துவதுடன், அதற்கான எரிபொருள் செலவினையும் அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் பிரசாரத்திற்காக உலங்குவானூர்திகளைப் பயன்படுத்தினால் அதற்கான செலவீனங்களை அவர்கள் தமது சொந்தப் பணத்திலிருந்து செலுத்த வேண்டும். வாகனங்களுக்கான கட்டணங்கள அந்தந்த அமைச்சில் செலுத்தப்படுவதுடன், வானூர்திகளுக்கான கட்டணங்களானது அந்தந்த நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டும். எனவே யாரும் தங்களுக்கான அரச வாகனங்களைப் தேர்தலுக்கு பயன்படுத்தினால் அதற்கான கட்டணத்தை கட்டாயம் செலுத்த வேண்டும் என றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்று ஒன்றுபட்டுள்ளது

## பிரபாகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

பிளவுபடும் நிலையிலிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இன்று ஒன்றுபட்டுள்ளதென ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலந்துரையாடலின்போது, தேர்தலை எவ்வாறு அணுகுவது மற்றும் பிரசார பணிகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக பிரசார பணியின்போது, 'நாட்டிற்கு உயிர்கொடுப்போம் - புதிய யுகத்தை ஆரம்பிப்போம்' என்ற வாசகத்தை முன்வைத்து, பிரசார பணிகளை முன்னெடுக்கவுள்ளோம்.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரி ஆற்றிய இந்த உரையின் மூலம், பிரதமர் ரணில்லை ஜனாதிபதி மைத்திரி திருடன் எனக் கூறியுள்ளமை தெளிவாக தெரிகின்றது.

காரணம், மத்திய வங்கியின் ஆளுநரை பதவி நீக்கம் செய்வதன் மூலம் உங்கள் நற்பெயரை காப்பாற்றிக்கொள்ளுங்கள் என ஜனாதிபதி வலியுறுத்தியபோதும், அவர் ஆளுநரை பதவி நீக்கம் செய்யாமல் இருப்பதானது, ரணிலும் இந்த ஊழலுக்கு உரித்தானவர் என்பதை ஜனாதிபதியின் உரை சுட்டிக்காட்டுகின்றது என அவர் கூறினார்.

# மகிந்தாவின் இன்றைய கூட்டத்தில் பங்கேங்கப் போவதில்லை

## துமிந்த திஸாநாயக்க முடிவு

(கொழும்பு)

மகிந்த தலைமையில் இன்று நடக்கும் முதலாவது கூட்டத்தில் பங்கேற்பதில்லை என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க முடிவு செய்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று அனுராதபுரத்தில் நடைபெறவுள்ளது. முன்னணியின் சார்பில் அந்த மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஒரே மேடையில் அமர விரும்பவில்லை எனக் கூறி அவர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார். எனினும் கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கான உதவிகளை வழங்க அவர் இணங்கியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் கல்வி சேவைகள் அமைசசராக பதவி வகித்த துமிந்த திஸாநாயக்க, அரசாங்கத்தில் இருந்து மைத்திரிபால சிறிசேன வெளியேறிய போது அவருடன் இணைந்து துமிந்தவும் வெளியேறினார். மகிந்த ராஜபக்ஷவின் எதிர்ப்பாளர்களில் சிலர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்த விலகி நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் கீழ் போட்டியிடும் நிலையில், துமிந்த திஸாநாயக்க உட்பட சிலரே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவானவர்களுக்கு எதிரான செயற்பாடுகளை மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் மேற்கொண்டுள்ளதாகவும் மகிந்த தரப்பின் பிரதான இலக்கு துமிந்த திஸாநாயக்க எனவும் கூறப்படுகிறது.

# நல்லாட்சி எதிர்பார்ப்புக்களை ஜனாதிபதி தகர்க்க மாட்டார்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

நல்லாட்சி எதிர்பார்ப்புக்களை தகர்ப்பதில்லை என்பதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிரூபித்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைசசர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

பியகம பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வேட்பு மனு வழங்கியதனால் குழப்பமடைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கு, ஜனாதிபதி மைத்திரியின் அண்மைய உரை புது ஊக்கத்தை அளித்துள்ளது. ஜனவரி மாதம் 8 ஆம் திகதி பெரும்பான்மையான மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச் செய்தனர்.

மக்கள் எதிர்பார்த்த நல்லாட்சியை ஜனாதிபதி பாதுகாப்பார் என்பது நாட்டு மக்களுக்குத் தெளிவாகியுள்ளது. நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நல்லாட்சியை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிவில் அமைப்புக்களின் நம்பிக்கையை ஜனாதிபதி சிதறடிக்கவில்லை என்பது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றத் தேர்தலில் கிழக்கின் நிலைமைகள்

மட்டுநகரிலிருந்து எழுகதிரோன்

**தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர மு[illegible]ணியில் இணைந்து போட்டியிடவுள்ளதாக அ[illegible]த்துள்ளனர். அந்த முன்னணியின் தலைவரும் நாட்டின் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் வேண்டுகோளை அடுத்தே தமது கட்சி அவர்களுடன் இணைந்து போட்டியிடும் முடிவை எடுத்தது என அவர்கள் தெரிவிக்கின்றனர். அந்த வகையில் கடந்த முறை போலன்றி மட்டக்களப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுடனான போட்டியில் இறங்கு முகத்தை தரிசிக்கும் வாய்ப்புகள் உண்டு.**

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் தமிழர்கள் அதிகமாக வாழும் மையமாக இருக்கும் மாவட்டம் மட்டக்களப்பே ஆகும். அம்பாறை, திருமலை மாவட்டங்கள் தமிழர்கள் இரண்டாம் நிலையில் வாழும் மாவட்டங்கள் ஆகும். அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே அதிகூடிய இடங்களை தமிழ் பிரதிநிதிகள் இன்றுவரை தக்கவைத்துள்ளனர்.

அதாவது மட்டக்களப்பு மாவட்டத்துக்குரிய ஐந்து உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்று உறுப்பினர்களை கொண்டுள்ளது. அதுதவிர ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சி என்பன தலா ஒரு உறுப்பினர்களை கொண்டுள்ளன.

தற்போதைய நிலையில் அம்பாறையில் ஒரே ஒரு தமிழ்ப் பிரதிநிதி மட்டுமே உள்ளார். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு மாறிய பியசேனா ஆகும்.

அதைத்தவிர அம்பாறையின் ஏழு பிரதிநிதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாலு பிரதிநிதிகளையும் ஐக்கிய தேசியக் கட்சி இரு பிரதிநிதிகளையும் கொண்டுள்ளது.

அதேபோல திருமலையில் உள்ள நான்கு எம்பிக்களில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான சம்பந்தர் மட்டுமே ஒரே ஒரு தமிழ்ப் பிரதிநிதியாக உள்ளார். ஏனையவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் இருவரும் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் ஒருவருமாக உள்ளனர்.

எனவே கிழக்கில் பல தமிழ்க் கட்சிகள் போட்டியிடும் ஒற்றுமையற்ற தன்மை தமிழ்ப் பிரதிநிதித்துவங்களை பாரியளவில் இழக்கச்செய்யும் வகையில் தாக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த முறை தேர்தல் களத்தில் இல்லாத கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணி போன்றன இம்முறை கிழக்கிலும் களமிறங்கியுள்ளமை அம்பாறையிலும் திருமலையிலும் மட்டக்களப்பிலும் தமிழ் வாக்காளர்களைப் பொறுத்த வரையில் பாரிய குழப்பத்தை உருவாக்கியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மட்டுமே இருந்தனர். ஆனால் இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் மேற்படி கட்சிகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளன. இந்த பல்முனை போட்டி பாரிய அளவில் இல்லாவிடினும் சிறிதளவிலேனும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கிக்கு சேதாரங்களை ஏற்படுத்துவது நிச்சயமாகும்.



மட்டக்களப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான வெள்ளிமலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணிக்காக முன் நிற்கின்றார். அம்பாறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பிலான காரைதீவு பிரதேச சபையின் தவிசாளராக இருந்த இராசையா போன்றோர் இம்முறை தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பை எதிர்க்கும் போட்டியில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

திருமலையிலும் இந்த பல்முனை போட்டிகள் தமிழர்களுக்குள்ளே நடைபெறவுள்ளன. அதேபோல தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினரும் உதவி தவிசாளருமான ஆனந்தன் இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் களமிறங்குகின்றார்.

இந்த பல்முனை போட்டி மாற்றங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக தாக்கம் செலுத்தாதுவிடினும் தமிழர்களின் விகிதாசாரம் குறைவாகவுள்ள திருமலை அம்பாறை போன்ற மாவட்டங்களில் தாக்கம் செலுத்துவதை தவிர்க்க முடியாது. அனேகமாக அம்பாறை மாவட்ட தமிழர்களின் பிரதிநிதித்துவம் இம்முறை பறிபோகும் வாய்ப்புகளே அதிகமாயுள்ளன.

இதன் காரணமாகவே கிழக்கை மையமாக கொண்டு இயங்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கிழக்கில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் சிதறடிக்கப்படுவதை கருத்தில் கொண்டு தமக்கு வெற்றி வாய்ப்புள்ள மட்டக்களப்பை விடுத்து அம்பாறை திருமலை போன்ற இடங்களில் போட்டியிடுவதைத் தவிர்க்கவுள்ளதாக முதலில் அறிவித்தனர்.

ஆனாலும் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றன அம்மாவட்டங்களில் போட்டியிடுவதை ஊர்ஜிதப் படுத்திக்கொண்ட பின்னர் அவர்களும் தமது முடிவினை மாற்றிக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறையிலும் திருமலையிலும் தலா ஒவ்வொரு வேட்பாளர்களை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் நிறுத்தவுள்ளனர் என அறிய முடிகின்றது. அந்த வகையில் அம்பாறையில் முன்னாள் கிழக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் நவரெட்னராஜா களமிறங்குவது உறுதியாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிக்க 3,65,167 பேர் தகுதி பெற்றுள்ளனர். இதன்படி மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் 1,72,499 பேரும், கல்குடா தொகுதியில் 1,05,056 பேரும், பட்டிருப்பு தொகுதியில் 87,612 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை இம் மாவட்டத்தில் 414 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் 199 நிலையங்களும் கல்குடாவில் 115 நிலையங்களும் பட்டிருப்புத் தொகுதியில் 100 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் கடந்த 2010ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தனித்துப் போட்டியிட்டபோதும் தமக்கென ஒரு பாராளுமன்ற பிரதி நிதியையாகிலும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. மட்டக்களப்பில் அவர்கள் 16,886 வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்டனர். இந்த வாக்கு வங்கி இன்றைய நிலையில் சற்றேனும் அதிகரித்துள்ள நிலைமையை அவதானிக்க முடிகின்றது.

காரணம் இம்முறை சந்திரகாந்தனே நேரடியாக களமிறங்குகின்றார். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அவர் முதலமைச்சராக இருந்தமையால் ஏனையவர்களே போட்டியிட்டனர். அதன் பின்னர் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அவர் பெற்றுக் கொண்ட வாக்குகளும் பாராளுமன்றத் தேர்தலை விட சற்று அதிகரித்தே (21,000) இருந்தது.

அதன் பின்னரான காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்புடன் கிழக்கு மாகாண சபையில் ஏற்பட்ட மாற்றங்கள் கிழக்குத் தமிழரித்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நிலைமையை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தமக்குச் சாதகமாக எதிர்வரும் தேர்தலில் பயன் படுத்துவர். அதன் காரணமாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் வாக்கு வங்கி சுமார் 25,000 த்தை தாண்டலாம் என எதிர்பார்க்கலாம்.

இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளனர். அது இன்னும் வெற்றி வாய்ப்புகளை அதிகரிக்கவே செய்யும். அந்த முன்னணியின் தலைவரும் நாட்டின் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் வேண்டுகோளை அடுத்தே தமது கட்சி அவர்களுடன் இணைந்து போட்டியிடும் முடிவை எடுத்தது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் கிழக்கே குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் நோக்கிலேயே இந்த முடிவு எட்டப்பட்டது எனவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தெரிவிக்கும் கருத்துக்கள் மட்டக்களப்பு தமிழரிடத்தில் கூடிய கவனம் பெறும். அந்த வகையில் கடந்த முறை போலன்றி மட்டக்களப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுடனான போட்டியில் இறங்கு முகத்தை தரிசிக்கும் வாய்ப்புகள் உண்டு எனலாம்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மட்டுமே இருந்தனர். ஆனால் இம்முறை கிழக்கிலும் களமிறங்கியுள்ள கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளன. இந்த பல்முனை போட்டி பாரிய அளவில் இல்லாவிடினும் சிறிதளவிலேனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கிக்கு சேதாரங்களை ஏற்படுத்துவது நிச்சயமாகும்.**

# தலையை நசுக்கிய பாம்பின் நிலையில் மகிந்த

## கூறுகிறார் சம்பிக்க ரணவக்க



(கொழும்பு)

பாம்பின் தலையை நசுக்குவதால் அது இறந்துவிடாது. அதன உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும். அதேபோன்று தான் இன்று மகிந்தவின் நிலைமை காணப்படுகின்றது. எனவே முழுமையாக அரசியலில் இருந்து மகிந்த துடைதெறியப்பட வேண்டும் என்று சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள வோட்டர்ஸ் வெரட்ஜ் ஹோட்டலில் நடைபெற்ற நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் சம்பிக்க ரணவக்க மேலும் குறிப்பிடுகையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்று ஆட்சியமைப்பது நிச்சயமாகும். ஆனால் தேர்தலுக்கு பின்னர் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து கூட்டணி ஆட்சியமைப்பது தொடர்பிலும் ஆராயப்படும். அதற்காக அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

கடந்த காலங்களில் வறுமையை அரசியலாக்கி சமுர்த்தி கொடுப்பனவு பெறுவோரை மனிதக் கேடயங்களாக்கியே ஜனாதிபதித் தேர்தலில் பஷிலினால் மகிந்தவுக்கு 57 இலட்சம் வாக்குகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இம்முறை பொதுத் தேர்தலில் இந்த விளையாட்டுகளுக்கு எல்லாம் இடமில்லை. நியாயமான நீதியான தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே மகிந்தவுக்கும் அவர் ஆதரவு அணிக்கும் இந்தத் தேர்தலில் வெற்றிபெறறு காட்டுமாறு சவால் விடுக்கின்றோம்.

ஜனாதிபதி 62 இலட்சம் மக்கள் வழங்கிய ஆணைகளுக்கு மதிப்பளித்து, மகிந்தவை நிராகரித்துள்ளார். இதனை வரவேற்கின்றோம். எமது முன்னணியை எதிர்காலத்தில் அரசியல் கட்சியாக பதிவு செய்வோம்.

அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் ஸ்திரமான ஆட்சியை நிலை நிறுத்திக் கொள்வதோடு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எமது முன்னணியின் தலைவராக்குவோம். இப்போதே இது தொடர்பாக எதனையும் கூற முடியாது.

ஜனாதிபதியின் விசேட உரைகுப் பின்னர் மகிந்தவின் புகைப்படத்தைக் காட்டி வாக்குகளை கொள்ளையடித்து நாடாளுமன்றம் வரக் கனவு காண்பவர்கள் இன்று திசை தடுமாறிப் போயுள்ளனர். அன்று சமஷ்டி முறையை ஆதரித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இன்று ஒற்றையாட்சி முறையை ஏற்றுக் கொள்ளச் செய்துள்ளோம். இது எமக்கு கிடைத்த வெற்றியாகும் என்றார்.

# ஊழல்களை மறைக்கவே நாடாளுமன்றம் கலைப்பு

## மேல்மாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊழல்களை மறைப்பதற்காகவே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்ததாக மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட நிலையில் இது தெளிவாக புலப்பட்டுள்ளது.

மத்திய வங்கி முறிக்கொள்வனவு தொடர்பிலேயே அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டது. எனினும் அதற்கு எதிராக நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

மாறாக நாடாளுமன்றம்  கலைககப்பட்டது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் அதன் ஆதரவாளர்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஒருமுறை காட்டிக்கொடுத்துள்ளார் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது ஐக்கிய தேசியக் கட்சியின் நன்மைக்காகவே செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# குதிரை ஓடிய பின்னர் லயத்தை பூட்டிய ஜனாதிபதி

## ரில்வின் சில்வா கிண்டல்

குதிரை ஓடிய பின்னர் லயத்தை பூட்டியது போல, மகிந்த தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுதி நேரத்தில் அறிவிப்பு விடுத்துள்ளார். இது காலம் தாழ்த்திய முடிவு என ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். காலம் தாழ்த்தியாவது ஜனாதிபதி சரியான முடிவை எடுத்துள்ளார். இதனை வரவேற்கின்றோம் .

மகிந்த ராஜபக்ஷவிற்கும் திருடர் கூட்டத்திற்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு வழஙகாமல் ஜனாதிபதி தவிர்த்திருக்க வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இந்த முடிவை தைரியத்துடன் அன்று மேற்கொண்டிருந்தால் மகிந்தவும் அவரது ஆதரவு அணியும் இந்தளவிற்கு வளர்ச்சி கண்டிருக்காது. அந்த இடத்தில் ஜனாதிபதி விட்ட தவறுதான் மகிந்தவுக்கு பிரசாரத்தை தேடிக் கொடுத்தது.

அத்தோடு 100 நாட்களின் பினனர் நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தல் நடத்தியிருந்தாலும் இனறைய நிலை ஏற்பட்டிருக்காது. ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டு தோல்வியடைந்த மகிந்த செல்லாக் காசாகவே இருந்தார். அப்போதே கடும் தீர்மானங்களை கட்சி மட்டத்தில் ஜனாதிபதி எடுத்திருக்க வேண்டும். இன்று "குதிரை ஓடிய பின்னர் லயத்தை பூட்டியது" போன்று ஜனாதிபதி செயற்பட்டுள்ளார். காலம் கடந்தாவது ஜனாதிபதிக்கு ஞானம் பிறந்துள்ளதை வரவேற்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மரத்திலிருந்து வீழ்ந்த மகிந்தவை 17 ஆம் திகதி யானை தாக்கும்

## பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மரத்திலிருந்து வீழ்ந்த மகிந்தவை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம 17ஆம் தகிதி யானை தாக்கும் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டம் எனது பிறந்த ஊராகும் கம்பஹாவிற்கு நான் பரதூட் மூலம் குதிப்பது மாவட்டத்தை சுத்தப்படுத்தவே தவிர கொள்ளையடிப்பதற்கு அல்ல.

குட்டி ரோமபுரியை அழிவடையச் செய்தது யார் என்பது எல்லோருக்கும் தெரியும். கடந்த காலங்களில் மக்கள் பணத்தில் கை வைககாத காரணத்தினால் நாடாளுமன்றில் ஊமை போன்று செயற்படவில்லை.

நாட்டில் நிலவிய சட்டம் ஒழுங்கீனங்களுக்கு எதிராக உயிர் அச்சுறுத்தலை கருத்திற்கொள்ளாது எதிர்க்கட்சியிலிருந்து குரல் கொடுத்தேன். பணம் இருந்தாலும இல்லாவிட்டாலும் தைரியமாக குற்றச் செயல்களுக்கு எதிராக குரல் கொடுக்க என்னை அரசியலுக்கு கொண்டு வந்த இரததினபுரி மக்களுக்கு நான் கடனாளி அல்ல.

இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு நான் செய்த மிகப் பெரிய சேவை, களவெடுக்காமல் இருந்தமையாகும்.

நாம் ஜனவரி மாதம் 8ஆம் திகதி அடைந்த வெற்றியுடன் மகிந்த ம்ரத்திலிருந்து வீழந்தார்.



ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி குருனாகலில் மகிந்தவை மாடு முட்டாது, யானையே தாக்கும் என தெரிவித்துள்ளார்.

மரம் ஏறி வீழ்ந்தவனை மாடு முட்டிய கதை என்பதற்கு நிகரான பழமொழியை அடிப் படையாகக் கொண்டு ரஞ்சன் ராமநாயக்க, மகிந்தவின் தேர்தல் தோல்வி குறித்து இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் கருத்து தேர்தல் பிரசாரத்தை பாதிக்கும்

## வாசு குற்றச்சாட்டு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய கருதது, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தை மிக மோசமாக பாதிக்கும் என முன்னாள் அமைசசர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கருத்து பிழையானது.

ஜனாதிபதி இவ்வாறான ஓர் கருத்தை வெளியிடாமல் இருந்திருக்க வேண்டும் அதுவே பொருததமானது.

ஜனாதிபதியின் கருத்து தொடரபில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் எதிர்ப்பை வெளியிட்டிருந்தேன். தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் இதனை எதிர்த்திருந்தார்.

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்து தேர்தல் நடவடிக்கைகளை மோசமாக பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைவார் என ஜனாதிபதி தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மத்தியவங்கி விவகாரம் ஐ.தே.க. நிலைப்பாட்டில் மாற்றம் தேவை

## கோருகின்றார் அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார



(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுநர் குறித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை பதவி விலகுமாறு கோருவது பொருத்தமானது என தாம் பிரதமர் ரணில விக்கிரமசிங்கவிடம் கூறியதாக ஜனாதிபதி கடந்த செவ்வாய்க் கிழமை ஆற்றிய விசேட உரையில் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருந்தார்.

மத்திய வங்கிய ஆளுநர் விவகாரம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றில் கருத்து வெளியிட்டிருந்தார்.

எனவே இது பற்றி நான் அதிகமாக பேசப்போவதில்லை.

ஆறு மாத காலத்திற்கு முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களினால் அதிக வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டார். நாட்டை மீளவும் பின்னோக்கி நகர்த்த ஜனாதிபதி விரும்பவில்லை.

நல்லாட்சி முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதனை மாற்றி மீளவும் திருடர்கள் ஆட்சியை கைப்பற்ற முயற்சிக்கின்றனர். மக்களின் நாடித் துடிப்பை அறிந்து ஜனாதிபதி செயற்பட்டு வருவதாக அமைச்சர் ரஞ்சித் மதநும பண்டார கொழும்பு ஊடக மொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# அரசியலிலிருந்து ஓய்வு மகிந்த அமரவீர தீர்மானம்

அமைச்சர் மகிந்த அமரவீர அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் குழப்பமடையச் செய்துள்ளன

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஆற்றிய உரையும் இந்த குழப்ப நிலைமைக்கு ஒரு காரணமாகும்.

அரசியலிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து இன்று அறிவிக்கப்படும்.

அரசியலிலிருந்து ஓய்வு பெறுக்கொள்ளத் தீர்மானித்தால் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இடைநிறுத்திக் கொள்வதாக மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கு உழைத்தவர்

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு



இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் நகர கிராம வேறுபாடின்றி அனைத்து பகுதிகளும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியை எட்டியுள்ளன யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு இயல்புக்கு திரும்ப வேண்டும் என்ற பொதுவான கொள்கையை நிறைவேற்றுவதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அதி தீவிர அக்கறை காட்டியிருக்கின்றார் என பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வேம்பொடுகேணியில் நடை பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மீள் குடியேற்றத்தின் பின் எமது மக்கள் இன்று ஓரளவு இயல்பு வாழ்வுக்கு திரும்பியுள்ளனர் கிராம நகர வேறுபாடின்றி அனைத்து பகுதிகளிலும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அதிக அக்கறை செலுத்தப்பட்டிருக்கின்றது அதற்கான உழைப்பை செலுத்தியவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மட்டுமே என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை அதனடிப்படையில் மக்கள் ஒவ்வொரு விடையங்களின் பயனைப் பெறுகின்ற போதும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் நினைவுக்கு வருவார்.

எனினும் மக்களின் அனைத்து தேவைகளையும் நிறைவு செய்ய முடியவில்லையே என்ற ஆதங்கமும் மக்களுக்கு நிரந்தர வாழ்வாதாரத்திற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற சிந்தனையும் அவரின் மனங்களில் பதிந்திருக்கின்றன. குறிப்பாக இளம் தலை முறையினரின் எதிர்காலம் தொடர்பிலும் அவர்களின் வாழ்வு பிரகாசமானதாக அமையவேண்டும் என்ற விடையத்திலும் அவர் அதிக கரிசனைகொண்டுள்ளார் அதனடிப்படையிலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை பெற் றுக் கொடுப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார் இவ்வாறு அனைத்து ம[illegible]ன் மனங்களிலும் நிறைந்[illegible]கும் அவர் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சேவையாற்ற வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி வேம்பொடுகேணியில் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்ற இக்கலந்துரையாடலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் தியாகராஜா மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கமக்கார அமைப்பின் தலைவர் மக்களும் கலந்து கொணடனர்.

# “யாழ்ப்பாண நினைவுகள் - 2”

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் - 2 நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.35 மணிக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையக் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

யாழ்ப்பாண வாழ்வியல் குறித்தான நனவிடை தோய்தல் கட்டு ரைகளாக இலங்கையின் முன்னணி நாளிதழ்களில் வெளியாகிய கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ள இந்த நூலின் வெளியீட்டு விழாவிற்கு ஹற்றன் நசனல் வங்கியின் யாழ்ப்பாண மெற்றோ கிளையின் முகாமையாளரும் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவருமான சிவசரவணபவன் சுந்தரேஸ்வரன் தலைமை தாங்கவுள்ளார்.நிகழ்வில் வரவேற்புரையை கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலையின் அதிபர் மகேசன்உமாசங்கர் நிகழ்த்த உள்ளார். வாழ்த்துரைகளை யாழ். இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை பிரதி அதிபர் பொன்னம்பலம் ஞான தேசிகன், கைதடியிலுள்ள அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் தங்கவடிவேல் கிருபாகரன், இராசரத்தினம் ஸ்ரீகரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

வெளியீட்டுரையை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர்ஆறுமுகம் சௌந்தரலிங்கம் நிகழ்த்த உள்ளார். நூலின் முதற்பிரதியை திருமதி வே.இளங்கோவன் சுஜீவா பெறவுள்ளார். நூலின் மதிப்பீட்டுரையை காவேரி கலாமன்ற இயக்குநர் வண.ரி. எஸ். ஜோசுவா நிகழ்த்தவுள்ளார். ஏற்புரையை நூலாசிரியர் வேதநாயகம் தபேந்திரன் நிகழ்த்த உள்ளார். (90)

# 25 ஆவது ஆண்டு நிறைவும் பயன்தரு மர நடுகையும்




யாவருக்கும் சேவை என்ற தொனிப்பொருளில் சங்கானை லயன்ஸ் கழகம் சார்பில் அதன் தலைவர் லயன். ஜெயச்சந்திர மூர்த்தி றஜீவன் தலைமையில் நேற்று முன்தினம் சூழல் எமது நண்பன் என்ற லயன்ஸ்- கழகத்தின் கோட்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள தேறாங்கண்டல் அதக பாடசாலையின் 25 ஆவது ஆண்டுகள் நிறைவு வெள்ளி விழா ஞாபகார்த்தமாக பயன் தரும் மலை வேம்பு மரக கன்றுகள் நாட்டப்பட்டன.

சங்கானை லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர் மல்லாவி ஹற்றன் நஷனல வங்கியின் அதிகாரி சிவகுமாரன் யோகியின் விசேட செயற்றிட்டமாக அவரின் நிதியுதவியுடன இந்த நிகழ்வு இம் பெற்றது. சங்கானை லயன்ஸ் கழகத் தின் இயக்குநர் லயன். டாக்டர். க.ஜெயச்சந்திரமூர்த்தி, நிகழ்சி செயற்றிட்டத் தலைவர் லயன் பெண்மணி மயூரிக்கா, கழகத்தின் உறுப்பினர்கள் யாழ் பல் கலைக்கழக பொறியியல் பீடமூர்த்தி லக்சன், சமூக ஆர்வலர் அருண்குமார், மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகஸ்தர் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொணடனர். (18)

# வேம்படி கந்தசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி திருக்கோவில் அலங்கார உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 12 தினங்கள் இடம்பெறவுள்ளன.

இவ்வலங்கார உற்சவத்தில் தினமும் காலை 9.30 மணிக்கு விசேட அபிஷேக பூசை இடம் பெறுவதுடன் வசந்த மண்டபப் பூசையும் நடைபெறவுள்ளதுடன் மகேஸ்வர பூசையும் இடம் பெறும்மாலை உற்சவம் 7 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகி வசந்த மண்டப பூசை இடம் பெற்று சுவாமி வள்ளி, தெய்வானை சமேதராக உள்வீதி, வெளிவீதி உலா வருதலும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெறுவதுடன் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை வைரீவர் சாந்தியும் இடம் பெறவுள்ளது. (இ)

# பாடசாலைகளுக்கான விருது வழங்கல் முதல் பத்து இடங்களுக்குள் ஸ்ரீ விஷ்ணு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச பாடசாலைகளுக்கிடையிலான 2014 - 2015 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கல் நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் ஆவரங்கால் புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம் அகில இலங்கை ரீதியில் முதல் பத்து இடங்களுக்குள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டிஸ் கவுன்சில் நிறுவனத்தின் அனுசரணை யுடன் அகில இலங்கை ரீதியில் 143 பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட சர்வதேசப் போட்டியில் பல போட்டியில் பல பாடசாலைகள பங்குபற்றி சிறபபுத் தெரிவிற்கான பரிசினைப் பெறறிருந்த போதிலும் அகில இலங்கை ரீதியில் யா/ஆவரங்கால் புத்த கலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம் முதல பத்து சிறந்த பாடசாலைகளுக்குள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான விருதும், வெற்றிச் சான்றி தழும் போட டிக்கான விருது வழஙகும் வைபவத்தின் போது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.மாவட்டத்திருந்து இப்போட்டிக்கு பங்குபற்றிய பாடசாலைகளில் தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களுக்குள் இப்பாடசாலை மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (03)

## முரசின் இன்றைய பலன்

17.07.2015 வெள்ளிக்கிழமை

மன்மத வருஷம் ஆடி மாதம் 1 ஆம் திகதி.
மரண யோகம் / பிரதமை திதி
பூச நட்சத்திரம் பிற்பகல் - 5.27 வரை பின் ஆயிலியம்
இராகு காலம் 10.30 - 12.00 வரை சுப நேரம் 6.00 - 7.30 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: முகவரின் மேல் நம்பிக்கை யற்று விட்டதால் கட்டிய பணத்தைப் பெற எண்ணமிடல்

**ரிஷபம்**: பிதாவின் நடுநிலையான மனப்பாங்கினால் சொத்துப் பங்கீடு சுமூகமடைதல்

**மிதுனம்**: போட்டிகளில் பரிசில் பாராட்டு பெற்று ஆனந்தமடைதல்

**கடகம்**: பெற்றோரின் நினைவாக தான தர்ம கைங்கரியத்தில் ஈடுபடல்

**சிம்மம்**: பழைய ஒப்பந்தம் காலைவாரி விட்டதால் புதிதில் மனம் வைக்காமை

**கன்னி**: லீசிங் வாகனம் பறிமுதலாகும் நிலை கண்டு பதகளிப்பும் அச்சமும் அடைதல்

**துலாம்**: அடகு வைத்த பொருள் ஏலம் போகும் செய்தி கேட்டு அவலப்படல்

**விருச்சிகம்**: பழைய மனையை மெருகூட்ட கடன்படும் நிலையை மேற்கொள்ளல்

**தனுசு**: புதிய நட்பில் சந்தேகம் ஏற்பட்டால் முளையிலேயே கைவிட்டு விடல்

**மகரம்**: எதிரியைக் கண்டவிடத்து பொறுமையைக் கடைப்பிடித்ததால் முரண்பாடு விலகல்

**கும்பம்**: செய்யாத செயலுக்கு பழி சுமத்தியதால் விதியை நொந்து வேதனைப்படல்

**மீனம்**: பிள்ளைகளின் அழைப்பின் பிரகாரம் பெற்றோருக்கு வெளியூர் யோகமேற்படல்

## கவாஸ்கர், கங்குலி, ராவிட் மூலம்

# சென்னை, ராஜஸ்தான் அணிகளை இயக்குவது குறித்து ஆலோசனை?



(டில்லி)

சென்னை, ராஜஸ்தான் அணிகளை கவாஸ்கர், கங்குலி ராவிட் ஆகியோரை வைத்து இயக்குவது குறித்து இந்திய கிரிக்கெட் சபை ஆலோசனை நடத்தவுள்ளது

ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பாக சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கு 2 ஆண்டு தடை விதிக்கபட்டது.

இந்த அணிகளின் நிர்வாகிகள் "ஸ்பொட்பிக்சிங்" சூதாட்டத்தில ஈடுபட்டதால் மேல் நீதிமன்றத்தின் விசாரணைக் குழு இந்த நடவடிக்கையை எடுத்தது.

இதனால் இனிவரும் இரண்டு ஐ.பி.எல் போட்டியில் எத்தனை அணிகள் விளையாடும் என்ற கேள்வி எழுந்துள்ளது. 2 ஆண்டு தடை விதிக்கப்பட்டதால் 6 அணிகள் விளையாடுமா? அல்லது 2 புதிய அணிகளை சேர்த்து வழக்கம் போல் 8 அணிகளை வைத்து விளையாடத் திட்டமா? என்பது பற்றி தெரியவில்லை.

நாளை மறுதினம் 19ஆம் திகதி நடைபெறும் ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழுவில் இதுபற்றி முடிவு செய்யப்படும். ஒளிபரப்பு விவகாரம் இருப்பதால் 8 அணிகளே விளையாட வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் டால்மியாவும், ஐ.பி.எல். தலைவர் ராஜீவ் சுக்லாவும் கொல்கத்தாவில் அவசர ஆலோசனை நடத்தினார்கள்.

அதன்படி சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளை கிரிக்கெட் சபையே ஏற்று நடத்தலாமா? என்று ஆலோசிக்கப்பட்டது.

கிரிக்கெட் சபை ஐ.பி.எல். போட்டியை நடத்துவதால் இந்த 2 அணிகளை இயக்குவதால் ஆதாயம் தரும் பிரச்சினைக்கு வாய்ப்பு இல்லை.

புதிதாக 2 அணிகளை 2 ஆண்டுக்கு மட்டும் ஏலத்தில் எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு என்பதால் இந்த




முடிவை கிரிக்கெட் சபை மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளை முன்னாள் கப்டன்கள் கவாஸ்கர், கங்குலி, ராவிட் ஆகியோரை வைத்து இயக்குவது பற்றி கிரிக்கெட் சபை பரிசீலித்து வருவதாகவும் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து கிரிக்கெட் சபை இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை. ஓட்டு மொத்த ஆதரவு இருந்தால் மட்டுமே அப்படி செயற்படமுடியும.

கிரிக்கெட் சபையில் இந்த முடிவுக்கு ஒருமித்த கருத்து ஏற்படாவிட்டால் 2 ஆண்டு ஐ.பி.எல். போட்டியை இடைநிறுத்தம் செய்யலாமா? என்பது பற்றியும் ஆலோசிக்கப்படுகிறது.

## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் பரிசுத்தொகை அதிகரிப்பு




கிரான்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளுக்கான பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பரிசுத் தொகையானது கடந்த ஆண்டிலும் 10.5 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி போட்டிக்கான மொத்த பரிசுத் தொகை 42.3 மில்லியன் டொலர்கள் எனவும் ஒற்றையர் பிரிவு சம்பியனுக்கான பரிசுத் தொகை 3.3 மில்லியன் டொலர்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிகளுக்கான பரிசுத் தொகையிலும் அதிகளவிலான பரிசுத் தொகை யை வழங்கி அதிக பரிசுத் தொகையை வழங்கும் கிறான்ஸிலாம் போட்டி என்ற பெருமையை அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் பெறுகின்றது.

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி ஆரம்பித்து செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு எதிரான டெஸ்ட் இந்திய அணி 23 இல் தேர்வு

(மும்பை)

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய அணி 23 ஆம் திகதி தேர்வு செய்யப்படவுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டி ஆகஸ்ட் 12,16 ஆம் திகதி வரையும், 2ஆவது டெஸ்ட் 20,24 ஆம் திகதி வரையும், 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் •ஆகஸ்ட் 28ஆம் திகதியிலிருந்து செப்ரெம்பர் 1ஆம் திகதி வரையும் நடக்கிறது.

டெஸ்ட் தொடருக்கு முன்பு இந்திய அணி இலங்கை ஏ அணியுடன் 3 நாள் ஆட்டத்தில் (6,8) விளையாடு கிறது.

இலங்கை சுற்றுப் பயணத்துக்கான இந்திய அணி வருகிற 23ஆம் திகதி அறிவிக் கப்படுகிறது. சந்தீப் பட்டீல் தலைமையிலான தேர்வுக் குழு டில்லியில் கூடி வீரர்களை தேர்வு செய்கிறது.

முழுமையான பலம் பெற்ற இந்திய அணி இதில் விளையாடும். சிம்பாப்வே பயணத்தில் 2ஆவது கட்ட இந்திய அணி விளையாடி வருகிறது. விராட் ஹோலி கப்டனாக நியமிக்கப்படுவார். வங்கதேசத்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆடிய வீரர்கள் இதில் இடம் பெறுவார்கள்.

இந்திய அணி 5 ஆண்டுகளுக்கு பிறகு இலங்கையில் டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது,. கடைசியாக 2010 ஆம் ஆண்டு சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் போட்டியில் ஆடியது. இந்த தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

# ஜோகோவிச்சின் ஆதிக்கம் இரண்டு வருடங்களுக்கு தொடரும்

## ஜோன்மெக்கன்ரோ ஆரூடம்



ரென்னிஸ் போட்டிகளில் அடுத்த இரண்டு வருடங்களுக்கு செர்பியாவின் நொவெக் ஜோகோவிச் ஆதிக்கம் செலுத்துவார் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நொவெக் ஜோகோவிச் இன்னும் 4 அல்லது 5 கிரான்ஸ்லாம் பட்டங்களை வெற்றிகொள்வார் என முன்னாள் முதல் நிலை வீரர் ஜோன் மெக்கன்ரோ கூறியுள்ளார்.

விம்பிள்டன் பகிரங்க ரென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரொஜர் பெடரரை வெற்றிகொண்டு நொவெக் ஜோகோவிச சம்பியன் பட்டத்தை சுவீரித்திருந்தார்.

இந்த நிலையில் நொவெக் ஜோகோவிச் உடல் நலத்துடன் இருப்பாராயின் அடுத்த இரண்டு வருடங்களுக்கு அவர் போட்டிகளில் ஆதிக்கம் செலுத்துவார் என ஜோன் மெக்கன்ரோ குறிப்பிட் டுள்ளார்.

கடந்த 53 வாரங்களாக நொவெக் ஜோகோவிச் முதலி டத்தில் நீடிப்பதுடன் இவ்வாண்டின் இதுவரை நடை பெற்ற 3 கிரான்ஸ்லாம் பட்டங்களில் இரண்டை அவர் சுவீகரித்துள்ளார்.

ரென்னிஸ் போட்டிகளில் தான் தெரிவுசெய்யும் சிறந்த வீரர்கள் ஐவரில் நொவெக் ஜோகோவிச்சும் ஒருவர் என ஜோன் மெக்கன்ரோ சுட்டிக்காட்டியுள்ளார். ஜோன் மெக்கன்ரோயின் சிறந்த ஐந்து வீரர்களின் பட்டியலில் ரொட்லாவர், பீற்றர் சாம்ராஸ், ரொஜர் பெடரர் மற்றும் ரபேல் நடால் ஆகியோரும் உள்ளடங்கியுள்ளனர்.

## மதுவால் வந்த வில்லங்கம்

# 4 போட்டிகளில் விளையாட போல்க்னருக்கு தடை

போதையில் கார் ஓட்டி சிறை சென்ற அவுஸ்ரேலிய வீரர் போல்க்னர், 4 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டது.

அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் ஜேம்ஸ் போல்க்னர், (25) இங்கிலாந்தின் கவுண்டி சம்பியன்ஷிப் பில்லன் காஷயர் அணிக்காக பங்கேற்று வந்தார்.

கடந்த 2ஆம் திகதி இரவு மான்செஸ்டரில் சக வீரர் டிம் பெய்னியுடன் அளவுக்கு அதிகமாக மது அருந்தி விட்டு காரில் சென்றார். இவரைப் பிடித்த போக்குவரத்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்தனர்.

பின் பிணையில் வெளிவந்தார். தற்போது போல்க்னர் மீது கிரிக்கெட் அவுஸ்ரேலியா (சி.ஏ.,) நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி அயர்லாந்து அணிக்கு எதிரான ஒருநாள் (ஆக., 27), டுவெனரி-20 போட்டி (ஆக., 31) மற்றும் இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டு ஒருநாள் (ஆக.31, செப்.3, 5) போட்டிகளில் பங்கேற்க போல்க்னருக்கு தடை விதிக்கப்பட்டது.

இதுகுறித்து சி.ஏ.,யின் செயல் இயக்குனர் பாட் ஹோவர்ட கூறுகையில், நாங்கள் எடுத்துள்ள நடவடிக்



கையை போல்க்னர் ஏற்றுக் கொண்டார். போட்டி நாட்களில் அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். தேவைப்பட்டால் மாற்று வீரர் அறிவிக்கப்படுவார், என்றார.

# டோனி இல்லாத ஐ.பி.எல் கற்பனை செய்வது கடினம்

## வருந்துகிறார் கவாஸ்கர்

டோனி இல்லாத ஐ.பி.எல் போட்டியை கற்பனை செய்து பர்ப்பதுகூட கடினமாக இருப்பதாக முன்னாள் இந்திய அணித்தலைவரும் வர்ணனையாளருமான கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் சூதாட்ட முறைகேட்டில் சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் கவாஸ்கரிடம் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் டோனியால் இன்னும் சில ஆண்டுகளுக்கு தொடர்ந்து விளையாட முடியும் என குறிப்பிட்டுள்ள கவாஸ்கர்,




சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வீரர்களுக்கு இது மிகவும் கடினமான தருணம் எனவும் தவறு செய்த சில வீரர்கள் ஏற்கனவே தண்டிக்கப்பட்டு விட்டார்கள். எனினும் எந்தவித தவறும் செய்யாத இரு அணி வீரர்களும் பாதிப்புக்கு உள்ளாகுவது வேதனைக்குரிய விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை நீதிபதிகள் தீர்ப்பு குறித்து நாம் கேள்வி எழுப்ப முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தெல்லிப்பளையில் விளையாட்டு விழா



தெல்லிப்பளை பிரதேச செயலக இளைஞர்களுக்கான விளையாட்டு நிகழ்வு நாளையும், நாளை மறுதினமும் மகாஜன கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் 5000,10000 மீற்றர் ஓட்டம், ஈட்டி எறிதல், குண்டெறிதல், உட்பட பல்வேறு போட்டிகள் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கால்பந்தாட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளது.



# தமிழகத்தில் கராத்தேயில் அசத்தும் வல்வெட்டித்துறை சிறுவன்

(சென்னை)

வல்வெட்டித்துறை மதவடியைச் சேர்ந்த கராத்தே மோகனின் மகன் டினேஷ்கரன் தமிழ்நாடு மாநில அளவிலான கராத்தே போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளார்.

சென்னை, மதுரை, பரமகுடி அகிய அனைத்து இடங்களிலும் நடைபெற்ற மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு, அனைத்துப் போட்டிகளிலும் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் தமிழகத்தின் கோவையில் நடைபெற்ற 7 ஆவது Imga World Championship ஜூனியர் பிரிவிலும் கலந்துகொண்டு 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

8 வருடங்களுக்கு முன்பு தமிழகத்திற்கு குடும்பத்தினருடன் இடம்பெயர்ந்த மோகன், முன்னர் வல்வெட்டியில் அமைந்திருந்த ரஞ்சனா திரையரங்கின் வேலை பார்த்த 'Operator" என அழைக்கப்பட்ட மாயழகுவின் மகன் ஆவார்.

# தரவரிசையில் சாதனை



சர்வதேச ரென்னிஸ் போட்டிகளில் வெற்றி மேல் வெற்றிகளை குவித்து வரும் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், இந்த ஆண்டில் அவுஸ்ரேலிய ஓப்பன், பிரெஞ்ச் ஓப்பன், விம்பிள்டன் ஆகிய மூன்று பட்டங்களையும் தொடர்ந்து வென்று சாதனை படைத்தார். 33 வயதான செரீனா முதலிடத்தில் நீடிப்பதுடன் தரவரிசையில் 13,161 புள்ளிகளை பெற்றுள்ளார்.

அவருக்கு அடுத்து 2ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்யாவின் மரிய ஷரபோவா 6,490 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இருவருக்கும் இடையே 6,671 புள்ளிகள் வித்தியாசமாகும். சர்வதேச ரென்னிஸ் சங்கம் 1975-ஆம் ஆண்டு கம்ப்யூட்டர் தரவரிசை முறையை அறிமுகம் செய்தது.

அதில் இருந்து முதலிட வீராங்கனை ஒருவர், 2-ஆவது இடத்தில் இருக்கும் வீராங்கனையை விட ஒரு மடங்கு அதிகமாக புள்ளிகள் பெற்றிருப்பது இதுவே முதல் முறையாகும். இந்த புதிய சாதனைக்கும் செரீனா சொந்தக்காரர் ஆகியிருக்கிறார்.

# வடக்கு,மலையக வி.ஒன்றியத்தின் கரப்பந்து சுற்று நாளை யாழில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-மலையகம் விளையாட்டு ஒன்றியம் நடாத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு-மலையக ஒன்றியத் தலைவர் தயாளபாலன் தெரிவித்தார்.

இப்போட்டியில் 19 வயது ஆண்கள் பிரிவில் ஆறு அணிகளும், பெண்கள் பிரிவில் ஆறு அணிகளும் மோதவுள்ளன. இதன்படி இப்போட்டியில் வடமாகாணத்தில் ஆண்கள், பெண்கள் அணியில் புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பங்குபற்றுவதுடன் இதேபோன்று மலையகத்திலிருந்து நோர்வூட் தமிழ் மகாவித்தியாலயம், தலவாக்கலை மகாவித்தியாலயம், கேம்பிரிட்ஜ் கல்லூரி அணிகள் பங்குபற்றவுள்ளன.

அத்துடன் நாளை மறுதினம் பி.ப. 3.30 மணிக்கு ஹற்றன்-இளவாலையங்கென்றிஸ் அணிகள் மோதும் கால்பந்தாட்டப் போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடக்கு, மலையக ஒன்றிய நட்புறவை வலுப்படுத்தும் வகையில் அண்மையில் ஆவரங்கால் மகாவித்தியாலயத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (93)

# தென்னாபிரிக்காவிடமும் தொடரை பறித்தது வங்கம்



தென் ஆபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் வங்க தேச அணி அபார வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.

தென் ஆபிரிக்கா- வங்கதேசம் அணிகள் இடையே 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடர் நடைபெற்றது.

இதன் முதல் இரு போட்டிகளில் தென் ஆபிரிக்கா, வங்கதேச அணிகள் தலா ஒரு வெற்றி பெற்றிருந்தன இந்நிலையில் கடைசி ஒருநாள் போட்டி சிட்டகொங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மழை காரணமாக ஆட்டம் 40 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென் ஆபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக டி கொக், அம்லா களமிறங்கினர்.

டி கொக் 8 ஓட்டங்களில் வெளியேற, அம்லா (15), டூபிளசி (6) அடுத்தடுத்து சாகிப் அல் ஹசன் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர். ரோசோ (17) நிலைக்கவில்லை.

டுமினி ஒரு அளவு தாக்குப் பிடித்தாடினார். இறுதியில் 40 ஓவர்கள் முடிவில் அந்த அணி 168 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து டகவேர்த் விதிப்படி 40 ஓவர்களில் 170 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்க தேசம் களமிறங்கியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய தமிம் இக்பால் மற்றும் சவுமிய சர்கர் தென் ஆபிரிக்க பந்துவீச்சாளர்களின் பந்தை அடித்து ஆடினர்.

சிறப்பாக ஆடிய சௌமியா சர்கார் 90 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

இறுதியில் 26.1 ஓவர்களில் 1 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டங்கள் எடுத்து வங்க தேசம் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 2-1 என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றியது.

ஆட்ட,தொடர்நாயகனாக சௌமியா சர்கார் தெரிவானார்

## குசல் பெரேராவின் அதிரடியில்

# 2 ஆவது ஒருநாள் போட்டியை வென்று அசத்தியது இலங்கை



பாகிஸ்தானுக்கு எதிரான 2 ஆவது போட்டியில் இலங்கை அணி அசத்தல் வெற்றி பெற்றுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் பல்லேகலவில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய அணித்தலைவர் அசார் அலி, ஷேசாட் ஓரளவு நல்ல தொடக்கம் கொடுத்தனர். ஷேசாட 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஹபீஸ் (9) வந்த வேகத்தில் நடையை கட்டினார்.

பாபர் (12) நிலைக்கவில்லை. மலிக் (51), ரிஸ்வான் (52) சிறப்பாக விளையாடி அரைச் சதம் அடித்தனர்

சர்பிராஸ் (7), யாசிர் ஷா (1) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, 50 ஓவர்கள் முடிவில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுக்கு 287 ஓட்டங்கள் எடுத்தது.

அன்வர் (29), ரஹாட் அலி (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இலங்கை சார்பில், மலிங்க, பத்திரன தலா 2, மத்யூஸ், பிரதீப், சிறிவர்தன, டில்ஷான் தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து 288 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கையின் குசல் பெரேரா மற்றும் டில்சான் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

இருவரும் சிறப்பாக ஆடினர். அதிரடியாக ஆடிய பெரேரா 13 பவுண்டரி, 2 சிக்ஸர் உட்பட 68 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.அவர் 16 பந்துகளில் அரைச்சதம் கடந்து சனத்தின் சாதனையை சமப்படுத்தினார்.

பின்னர் தரங்காவுடம் டில்சான் ஜோடி சேர்ந்தார். இந்நிலையில் தரங்க(28) டில்சான் (47) மத்தியூஸ் (8) திரிமன்னே (4) ஆகியோர் வரிசையாக ஆட்டமிழந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் வந்த தினேஷ் சண்டிமால் 48) அணியை சரிவில் இருந்து மீட்கும் நடவடிக்கையில் இறங்கினார்.

இறுதியில் 48.1 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 288 ஓட்டங்கள் எடுத்து இலங்கை வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக குசல் பெரேரா தெரிவானார்.

# ஜெய்ப்பூரின் விளையாட்டு

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வுநிறுவனம் தனது 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டுப்போட்டிகளை நடாத்தவுள்ளன.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் துவிச்சக்கரவண்டி, முச்சக்கர வண்டி ஓட்டம், சக்கர நாற்காலி ஓட்டம், கரப்பந்தாட்டம், மென்பந்து, துடுப்பாட்டம், மேசைப் பந்தாட்டம், பூப்பந்தாட்டம் ஆகியன நடைபெறவுள்ளன.

# தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு இம்முறை தேர்தலில் யாழ் மாவட்டத்தில் 3 உறுப்பினர்களே கிடைக்கலாம்!

- கொடுமுடி சத்தியசீலன் கட்டுரையிலிருந்து.



இந்தமுறை யாழ் மாவட்ட தேர்தல் முடிவுகள் ஆச்சரியகர மாக இருக்கும் என பெரும்பா லான தமிழ் புத்திஜீவிகள் மற்றும் அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் வீழ்ச்சியின் ஆரம்பம் இந்த தேர்தல் முடிவுகள் ஊடாக தெரிய வரும் என பலரும் அபிப்பிராயப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இதுவரை காலமும் 9 உறுப்பினர்களாக இருந்த யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை இம்முறை 7 ஆக குறைவடைந் துள்ளது. இதில் ஈ.பி.டி.பி சென்ற தடவையை விட ஒரு ஆசனம் குறைந்து இரண்டு ஆசனங்கள் பெறக்கூடிய நிலையில் உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் விஜயகலா மகேஸ்வரன் மீண்டும் வெற்றிபெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இவர்கள் தவிர, தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை உள்ளது.

இந்த நால்வரும் வெற்றி பெற்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மூவர் மட்டுமே வெற்றி பெறக்கூடிய நிலைமைதான் எஞ்சி இருக்கும். அந்த மூவரில் இருவர் மாவை சேனாதிராசாவும் தர்மலிங்கம் சித்தார்த்தனும் என்பதில் சந்தேகமில்லை. மாவையின் தெரிவு அசைக்க முடியாதது. சித்தார்த்தன் தமிழரசுக் கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் வி.தர்மலிங்கத்தின் புதல்வர் என்பதுடன், புளொட் இயக்கத்தின் தலைவரும் ஆவார். அந்த தகுதிகள் காரணமாக கடந்த வட மாகாணசபை தேர்தலில் அவர் மூன்றாவது இடத்தை பிடித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் மூன்றாவதாக வெற்றி பெறப்போவது சுரேஷ் பிரேமச்சந் திரனா அல்லது மதியாபரணம் சுமந்திரனா என்பதுதான் தெளி வில்லாமல் இருக்கிறது. அதற்கு அடுத்தடுத்த இடங்களை சிவ ஞானம் சிறிதரனும், ஈசுவரபாதம் சரவணபவனும் பெறக்கூடும்.

இதுதான் தற்போதுள்ள யாழ் மாவட்ட தேர்தல் நிலவரம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அதில் ஒன்று, இதுவரை காலமும் எதிர்ப்பு அரசி யல் செய்து கூட்டமைப்பால் எதனை யும் சாதிக்க முடியாத நிலையில், ஈ.பி.டி.பியின் பாதையையே கடைசியில் கூட்டமைப்பும் பின்பற்றும் சூழல் உருவாகியுள்ளது என்பதாகும். எனவே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை மட்டும் ஏன் ஏகப்பெரும்பான்மையாக ஆதரிக்க வேண்டும் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. வழமையாக கூட்டமைப்பு தமிழ் மக்களை பார்த்துச் சொல்லும் "சர்வதேசம் உங்களை உத்துப் பாக்குது, தமிழற்றை ஒற்றுமையை உலகிற்கு எடுத்து காட்டுங்கோ" என்பன போன்ற அறைகூவல்கள் இந்தமுறை எடுபடாது என்பது தெளிவாக தெரிகிறது.

அடுத்த விடயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அதிருப்தி அடைந் தவர்களும், தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்காதவர்களும் இம்முறை கஜேந்திரகுமார் பொன்னம் பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியை ஆதரிக்கும் நிலையில் இருக் கின்றனர். புலம்பெயர் புலிகளும் அவ ரையே ஆதரிக்க முடிவு செய்துள்ளனர்.

இன்னொரு விடயம், முன்னாள் புலி இயக்க உறுப்பினர்கள் தனிக்கட்சி அமைத்து தேர்தலில் தனியாக போட்டி யிட முடிவு செய்துள்ளதால், அவர் களில் ஒருவராவது இம்முறை தேர்த லில் வெற்றிபெற முடியாவிட்டாலும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கணிச மான வாக்குகளை அவர்கள் பிரிப்பார் கள். குறிப்பாக, அவர்களின் இணைப் பாளராக செயலாற்றும் நடேசபிள்ளை வித்தியாதரன், தனது மைத்துனரும் உதயன் பத்திரிகையின் உரிமையா- ளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சரவணபவன் கடந்த பொதுத் தேர்தலில் தனக்கு காலை வாரியதால், அந்த வன்மம் காரண- மாக, இந்த தேர்தலில் சரவணபவனை எப்படியும் தோற்கடிக்க வேண்டும் என கங்கணம் கட்டி செயற்படுகின்றார் என கூறப்படுகிறது.


இதுதவிர, சென்ற வட மாகாணசபை தேர்தலில் முதலமைச்சர் விக்னேஸ்வர னுக்கு அடுத்ததாக அதிகப்படியான வாக்குகள் பெற்ற அனந்தி சசிதரனுக்கு தேர்தலில் போட்டியிட கூட்டமைப்பு இடம் கொடுக்காததாலும், ஏற்கனவே அவருக்கு கூட்டமைப்பு தலைமையுடன் உள்ள மோதல்களாலும், அவர் இந்த முறை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவே செயற் படக்கூடிய சூழலே உள்ளது. இன் னொரு மாகாண சபை உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கமும் தனக்கு சந்தர்ப்பம் வழங்காத கூட்டமைப்புக்கு எதிராகவே செயற்படுவார் என தெரிகிறது. இவர்கள் இருவரும் பெரும்பாலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சிக்கே ஆதரவு வழங்குவார்கள் என்ற பேச்சு இருக்கிறது.

தமிழரசுக் கட்சித் தலைமையுடன் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வரும் சுரேஷ் பிரேமச்சந்திரனை எப்படியும் இந்தத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என அவருக்கு எதிராக தமிழரசுக் கட்சியினர் மறைமுக வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் சம்பந்தனினதும் சுமந்திரனதும் உருவ பொம்மைகளை எரித்ததின் பின்னணியில் பிரேமச்சந் திரன் இருந்த விடயம் காரணமாக அவர் மீதான கோபம் அவர்களை விட்டு இன்னமும் அகலவில்லை.

அதேபோல, சுமந்திரனைத் தோற்கடித்து திரும்பவும் அவரை கொழும்புக்கே அனுப்பி வைக்க வேண்டும் என பிரேமச்சந்திரனும் தனது ஆதரவாளர்களிடம் கூறி வருவதாக அறிய முடிகிறது. இந்தத் தேர்தலில் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் ஒரு மறைமுக பாத்திரம் வகிக்க முற்படுகிறார் எனத் தெரிய வருகிறது. இரா. சம்பந்தனுக்குப் பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கு குறி வைத்துள்ள விக்னேஸ்வரன், தனக்குப் போட்டியாக வரக்கூடிய மாவை சேனாதிராசாவை தேர்தலில் தோற்கடிக்க முடியாவிட்டாலும், மற்றவர்களை விட குறைந்த வாக்குகள் பெற வைக்க வேண்டும் என அவர் விரும்புவதாக அவருக்கு நெருக்கமான சிலர் கூறுகின்றனர். அதன் மூலம் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள சம்பந்தன் - விக்னேஸ்வரன் - சுமந்திரன் அச்சைப் பலப்படுத்தி, கொழும்பு சிங்களத் தலைமையுடன் பேரம் பேசும் சக்தியாக தம்மை நிலைநாட்ட அந்த அணி முற்படுவதாகத் தெரிகிறது.

மொத்தத்தில் இம்முறை யாழ். மாவட்ட தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு அதிர்ச்சி. வைத்தியம் செய்வதாகவும், தீவிர மான தமிழ்த் தேசியவாத சக்திகள் மீண்டும் தலையெடுக்கும் களமாக அமையக் கூடியதாகவும் இருக்கலாம் என்பதே, யாழ். மாவட்ட புத்திஜீவிகள் பெரும்பாலோரின் கருத்தாக இருக்கிறது.

# அருவருப்புக்கு எதிர்ப்பு!



தற்போது, தொலைக்காட்சிகளில் ஏதாவது விவகார மான நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டால், அது சம்பந்தப்பட்ட அமைப்புகள் போர்க்கொடி தூக்குவது உண்டு. சமீபத்தில், பெரு நாட்டு, தொலைக்காட்சி ஒன்றில், "ரியாலிட்டி ஷோ" நடைபெற்றது. போட்டியில் கலந்து கொள்வோர், திராட்சை ரசம் கலந்த சாலட்டுக்குள் வைத்துள்ள கரப்பான் பூச்சிகளை சாப்பிட வேண்டும். இதில் வெற்றி பெற்றால், மெக்சிகோ சென்று வர, இலவச டிக்கெட் வழங்கப்படும். இப்போட்டியில், இளம்பெண் ஒருவர் வென்றார். ஆனால், அருவருப்பான இக்காட்சிகளை, தொலைக்காட்சியில் பார்த்த மக்கள் ஆத்திரமடைந்து, போராட்டத்தில் குதித்து, தினமும், தொலைக்காட்சி நிலையம் முன், ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.


# இது எப்படி இருக்கு?

இந்த விமானம், அமெரிக்க ஜனாதிபதி பயணம் செய்வது. போயிங் 747 ரகம். இதில் 87 டெலிபோன்கள் உள்ளன. 19 டெலிவிஷன்கள் பொருத்தப்பட்டுள்ளன. தரை முழுவதும் தோல் விரிப்பு விரிக்கப்பட்டுள்ளது. ஒரு தனி அலுவலக அறை. ஒரு படுக்கையறை. ஒரு குளிய லறை. இது தவிர, டெலிவிஷன் நிலையம் உள்ளது. மேலும் உலகப் புகழ்பெற்ற பாதுகாவலர்கள், அவர்களுக்குத் தேவை



யான பொருள்கள் உள்ளன.

இந்த விமானத்தின் விலை, 39 கோடி டொலர்கள் அதாவது 39 கோடியை 130 ஆல் பெருக்கினால், இன்றைய விலை- யைப் புரிந்து கொள்ள முடியும்!.




# பேஸ்ஃபுக் கண்டுபிடிப்புக்கு உரிமை கொண்டாடிய இந்தியர்!

பேஸ்.்.புக் பிரபலமானபோது, அதற்கு அதன் இன்றைய நிர்வாகி மார்க் ஷுகர்பெர்க் குடன் இணைந்து மேலும் மூன்று பேர் அந்தக் கண்டுபிடிப்புக்கு உரிமை கொண்டாடினர்.

வழக்கு முடிந்து, நீதிமன்றம் 65 மில்லியன் டொலர் வழங்க உத்தரவிட்டது. இந்த மூன்று கண்டுபிடிப்பாளர்களில் ஒருவர் இந்தியர். பெயர் திவ்யா நரேந்திரர்.

இன்று இவர் "Sumzero" என்ற பெயரில் ஒரு இன்வெஸ்ட்மென்ட் இணையத்தளம் நடத்துகிறார். இவருக்கு இப்போதும் பேஸ்புக்கில் 0.022 சதவி- கித உரிமை உள்ளது.

# "மெல்லிசை மன்னர்" எம்.எஸ்.விஸ்வநாதன் (87)



❖ மனையங்கத்து சுப்ரமணியன் விஸ்வநாதன் கேரளாவின் பாலக்காடு அருகே உள்ள எலப்புள்ளி கிராமத்தில் (1928) பிறந்தவர். 4 வயதில் தந்தையை இழந்தவர், தாத்தா வீட்டில் வளர்ந்தார். பள்ளியில் படித்ததில்லை. தியேட்டர்களில் நொறுக்குத் தீனி விற்பார். நீலகண்ட பாகவதரிடம் இசை பயின்றார். குருவுக்குத் தட்சணை கொடுக்க இயலாமல், அவருக்குப் பணி விடை செய்து அந்தக் கடமையை நிறைவேற்றினார்! 13 வயதில் மேடைக் கச்சேரி நிகழ்த்தினார்.

❖ அன்புக்கு உகந்த மனைவி ஜானகி அம்மாள், கோபி கிருஷ்ணா, முரளிதரன், பிரகாஷ், அரிதாஸ் என நான்கு மகன்கள் லதா மோகன், மதுபிரசாத் மோகன், சாந்தி குமார் என மூன்று மகள்கள். ஆனால், யாருக்கும் இசையில் நாட்டம் இல்லை!.

❖ நடிகர், பாடகராக வரவேண்டும் என்பது எம்.எஸ்.வி.யின் ஆரம்பகால விருப்பம். அது நிறைவேறவில்லை. சினிமா கம்பெனியில் எல்லோருக்கும் தேநீர் கொடுக்கும் பையனாக வேலை பார்த்தார். பிறகு, இசையமைப்பாளர் சி.ஆர்.சுப்புராமன் குழுவில் இவர் ஆர்மோனியக் கலைஞராகவும், டி.கே.ராமமூர்த்தி வயலின் கலைஞராகவும் சேர்ந்தனர்.

❖ சுப்புராமனின் திடீர் மறைவால் பாதியில் நின்ற அவரது படங்களை இவர்கள் இருவரும் முடித்துக் கொடுத்தனர். "தேவதாஸ்", "சண்டிராணி" படங்களின் இணை இசையமைப்பாளர்களாக அறிமுகமாயினர். "பணம்" திரைப்படத்தில் ஆரம்பித்து, "ஆயிரத்தில் ஒருவன்" வரை 700 திரைப்படங்களுக்கு இணைந்து இசையமைத்தனர்.

தன் குரு எஸ்.எம். சுப்பையா நாயுடு இருக்கும்போதே அவருக்கு பாராட்டுக் கூட்டம் நடத்தி, பொற்கிழி அளித்தார். அவர் இறந்த பிறகு, அவரது கடைசிக் காலம் வரை தன் வீட்டிலேயே வைத்திருந்து இறுதிக் கடமைகள் செய்தார்!

❖ எம்.எஸ்.வி தனியாக 500 படங்களுக்கு மேல் இசையமைத்துள்ளார். இளையராஜாவோடு சேர்ந்து "மெல்லத் திறந்தது கதவு", "செந்தமிழ்ப் பாட்டு", "செந்தமிழ் செல்வன்", என மூன்று படங்களுக்கு இசை அமைந்தார். "கண்ணகி", "காதல் மன்னன்", "காதலா காதலா" உட்பட 10-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

❖ பீம்சிங், கிருஷ்ணன் பஞ்சு, திருலோகசந்தர், கே.பாலசந்தர் ஆகிய 4 இயக்குநர்களிடம் அதிகம் பணிபுரிந்துள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி உட்பட பல மொழிகளிலும் 1,200 படங்களுக்கு மேல் இசையமைத்துள்ளார். கிட்டத்தட்ட, 1951இல் ஆரம்பித்து 1981 வரை 30 வருடங்கள் எம்.எஸ்.வி-யின் இசை ராஜ்யம்தான்!.

❖ "புதிய பறவை" படத்தில் வரும் "எங்கே நிம்மதி" பாடலுக்கு அதிகபட்சம் 300 இசைக் கருவிகளையும், "பாகப்பிரிவினை" படத்தில் வரும் "தாழையாம் பூ முடிச்சு" பாடலுக்கு 3 இசைக் கருவிகளையும் பயன்படுத்தியவர். "நீராரும் கடலுடுத்த.." என்று தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு இசையமைத்தவர்.

❖ சொந்தக் குரலில் பாடுவதில் பெரும் பிரபலம் அடைந்தார். குறிப்பாக, உச்சஸ்தாயியில் பாடின பாடல்கள் பெரும்புகழ் பெற்றவை, "பாவ மன்னிப்பு" படத்தில் "பாலிருக்கும் பழமிருக்கும்" பாடலில் உள்ள குரல்மீட்டலாக ஆரம்பித்தது இந்தப் பாட்டுக் கச்சேரி!

❖ கர்னாடக இசை மேதைகள் எம்.எல்.வசந்தகுமாரி, பாலமுரளி கிருஷ்ணா, மகாராஜபுரம் சந்தானம், பாம்பே ஜெயஸ்ரீ போன்றவர்களை தன் இசையில் பாடவைத்துள்ளார்.

❖ ஒரே பிறந்த திகதியைக் கொண்ட தமிழ்த் திரையுலக ஜாம்பவான்கள் எம்.எஸ்.வி-யும், கவியரசு கண்ணதாசனும் சிறந்த நட்புக்கு உதாரணமாகத் திகழ்ந்தனர். "அத்தான்..... என்னத்தான்...." பாடலைக் கேட்டுவிட்டு, இந்த மாதிரி பாடலைப்பாட வாய்ப்பு கிடைத்தால், சென்னையிலேயே வந்து தங்கிவிடுவேன்" என்று ஒரு முறை மேடையில் லதா மங்கேஷ்கர் சொன்னார். கைதட்டலில் அதிர்ந்தது அரங்கம்!

❖ உலக இசையைத் தமிழில் புகுத்தி எளிமைப்படுத்திய பெருமையும் இவருக்குத்தான். எகிப்திய இசையைப் "பட்டத்து ராணி" பாடலும், பெர்சியன் இசையை "நினைத்தேன் வந்தாய் நூறு வயது"விலும், ஜப்பான் இசையைப் "பன் சாயி காதல் பறவை"களிலும், லத்தீன் இசையை "யார் அந்த நிலவிலும்", ரஷ்ய இசையைக் "கண் போன போக்கிலே கால் போகலாமா"விலும், மெக்சிகன் இசையை "முத்தமிடும் நேரமெப்போ" பாடலிலும் கொண்டுவந்தார்!

❖ "நெஞ்சில் ஓர் ஆலயம்" படத்தில் இடம் பெற்ற "முத்தான முத்தல்லவோ" பாடல் 20 நிமிஷங்களில் இவர் இசைக்கோர்ப்பு செய்த பாடல், "நெஞ்சம் மறப்பதில்லை" பாடல் உருவாகத்தான் இரண்டு மாதம் ஆனது! "நெஞ்சம் மறப்பதில்லை" மெட்டுக்காக பலநாள் அலைந்து கடைசியில் கடல் அலைகளைக் கேட்டு, அலை வந்து பின்னகரும் ஓசையை வைத்து அதை உருவாக்கியதாக அவர் சொல்லியிருக்கிறார்.

❖ விஸ்வநாதனின் இசையமைப்பு மேலோட்டமான நோக்கில் மிக எளிமையானது. உடனடியாக ரசிகனைக் கவர்வது. ஆனால் கூர்ந்து கவனிக்கும்போது அதன் ஆழங்கள் தெரியும். ஒரேபாடலில் அவர் பல மெட்டுக்களை போட்டிருப்பார். ஒரே மெட்டை பல்வேறு விதமாக பாடியிருப்பார். உணர்ச்சிகள் சார்ந்து சொற்களுக்கு புதிய அர்த்தங்கள் கொடுத்திருப்பார். பல்லவி முடிந்ததும் பல பாடல்கள் முற்றிலும் வேறுகட்டத்துக்குச் செல்லும். முடியும் முன் சட்டென்று புதிய ஒரு மெட்டு வந்துசேரும். அவர் இசையமைத்த பல்லாயிரம் பாடல்களில் இருந்து உதாரணம் காட்டி இதை விளக்கலாம். ஆனால் அது ஒரு நீண்ட பணி. ஒரே ஒரு உதாரணம், "அன்புள்ள மான்விழியே" என்ற பாடல். ஒவ்வொரு நான்கு வரிக்கும் புதியமெட்டு வந்தபடியே இருக்கும் அப்பாடலில்!

❖ வி.குமார், இளையராஜா, ரஹ்மான், கங்கை அமரன், தேவா, யுவன்ஷங்கர் ராஜா, ஜி.வி.பிரகாஷ் போன்ற அனைத்து இசையமைப்பாளர்களிடமும் பாடி இருக்கிறார். எம்.எஸ்.வி, தன் இசையறிவை பெரிதாக நினைத்துக் கொள்ளாத பெரும் மனப்போக்கினால் நிகழ்ந்தது இது!

❖ பிரபல ஹிந்தி இசையமைப்பாளர் நௌஷாத் எம்.எஸ்.விஸ்வநாதன் பற்றி சொன்னது: "நான் அவரிடமிருந்து நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். ஆகவே அவரை என் ஆசிரியராகவே நான் சொல்ல வேண்டும். "ஆலயமணி"யின் ஹிந்தி பதிப்புக்கு நான் இசையமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். படம் பார்த்துவிட்டு நான் சொன்னேன், விஸ்வநாதன் உச்சபட்சமாக செய்துவிட்டார். இனி நான் செய்வதற்கு ஒன்றுமே இல்லை. எம்.எஸ்.வி எனக்கு குரு ஸ்தானத்தை அளித்துள்ளார், அதற்குக் காரணம் அவரது எளிமையும் பணிவுமேயாகும். அவரது பல மெட்டுகள் என்னை பரவசம் கொள்ளச் செய்துள்ளன".


❖ இளையராஜா ஒருமுறை சொன்னார், "எத்தனை பாடல்களில் அவர் என் நெஞ்சை உருகவைத்து மெய்மறக்கச் செய்திருக்கிறார்! அவரது ஒவ்வொரு பாடலும் விலைமதிக்க முடியாத ரத்தினங்கள் அல்லவா? இசைவழியாக நான் எதையாவது அடைந்திருக்கிறேன் என்றால் அதை நான் எம்.எஸ்.வி-யின் பாதங்களில் காணிக்கையாக்குகிறேன்"

❖ சமீபகாலப் பேட்டி ஒன்றில் ஏ.ஆர். ரஹ்மான் சொன்னார் "எம்.எஸ்.விஸ்வநாதன் தான் எக்காலத்திலும் எனது நெஞ்சுக்குரிய இசையமைப்பாளர், அவரே உண்மையான இசைமேதை என்று. எம்.எஸ்.வியின் பாதிப்பு இல்லாத இசையமைப்பாளர்கள் தமிழில் இல்லை, இருக்கப்போவதுமில்லை".

❖ எம்.எஸ்.விஸ்வநாதன் தன் வாழ்நாளில் எந்த தேசிய விருதையும் பெறவில்லை. ஏன் ஒரு மாநில அரசு விருதுகூட அவருக்கு அளிக்கப்படவில்லை. குறிப்பிடும்படியாக அரசின் எந்த அங்கீகாரமும் அவருக்கு அளிக்கப்படவில்லை. எம்.எஸ்.வி அடிக்கடி மேடைகளில் சொல்லும் ஒரு வரி உண்டு "இறக்கும் மனிதர்கள், இறவாப்பாடல்கள்". ஆம், மனிதர்கள் உருவாக்கி வழங்கும் எல்லா விருதுகளும் அம்மனிதர்களுடனேயே அழிபவை ஆனால் ஒரு பரந்த மக்கள் கூட்டத்தின் ரசனையையே வடிவமைத்த எம்.எஸ்.விஸ்வநாதனின்

# ஊரும் உலகமும்

## மொரார்ஜியின் வேண்டுகோளை ஜே.ஆர். நிராகரித்தார்



ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசாங்கம் 1977 இல் பதவியேற்றதும் மலையகப் பகுதிகளில் இந்திய வம்சாவளியினரான தோட்டத் தொழிலாளருக்கு எதிரான தாக்குதல்கள் இடம்பெற்றன.

அரசாங்க ஆதரவாளர்களே இத் தாக்குதலை மேற்கொண்டவர்கள். இந்திய வம்சாவளியினரில் ஒரு பகுதியினர் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதால் அமைச்சரொருவரை இலங்கைக்கு அனுப்பி நிலைமையை ஆராய வேண்டும் என்று அன்றைய இந்தியத் தூதுவர் குர்பசான் சிங் இந்தியாவின் புதிய பிரதமர் மொரார்ஜி தேசாய்க்கு அறிவித்தார். அமைச்சரொருவரை அனுப்புவது தொடர்பாக மொரார்ஜி விடுத்த வேண்டுகோளை ஜே.ஆர்.ஜயவர்த்தன நிராகரித்துவிட்டார். அரசாங்க ஆதரவாளர்களே தாக்குதலை நடத்தியவர்கள் என்ற உண்மை தெரியவரக் கூடாது என்பதற்காகவே மொரார்ஜியின் வேண்டுகோளை ஜேர்.ஆர். நிராகரித்தார்.

அதேநேரம் ஜே.ஆர்.ஜயவர்த்தன தனக்குப் பழக்கமான இந்திய வர்த்தகர் எஸ்.ஏ.சிதம்பரன் என்பவரை அழைத்து நிலைமையைப் பரிசீலித்து மொரார்ஜிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் படி கூறினார். கலவரம் ஒரு உள்நாட்டுக் குழப்பம் என்றும் இலங்கை அரசாங்கம் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாகவும் எஸ்.ஏ.சிதம்பரன் அளித்த விளக்கத்தை மொரார்ஜி தேசாய் ஏற்றுக்கொண்டார்.

## சினிமாவுக்குள் மூழ்கிய திருவிதாங்கூர் சகோதரிகள்



லலிதாவும் பத்மினியும் திருவிதாங்கூர் சகோதரிகள் என்ற பெயரில் சென்னையில் தங்கியிருந்து நடன நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தனர். அவர்களின் ஒரு நடன நிகழ்ச்சியைப் பார்த்த ஏ.வி.மெய்யப்பச் செட்டியார் தனது வேதாள உலகம் படத்தில் அவர்களை நடிக்க வைக்க விரும்பினார்.

நாங்கள் திருவிதாங்கூர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நடனக் காட்சியில் பங்கு பற்றுவோமேயொழியப் படத்தில் நடிக்க மாட்டோம் என்று இருவரும் உறுதியாகக் கூறிவிட்டார்கள்.

செட்டியார் விட்ட பாடாக இல்லை. கதையோடு தொடர்பு இல்லாத ஒரு நாட்டிய நாடகத்தை வேதாள உலகம் படத்தில் புகுத்தி அவர்களை அதில் நடிக்க வைத்தார். பூப்பறிக்கச் சென்ற பாம்பாட்டியைப் பாம்பு கடிப்பதும் அவனது மனைவி ஓடிச்சென்று பச்சிலை வைத்தியம் செய்து காப்பாற்றுவதும்தான் கதை. பாம்பாட்டியாக பத்மினியும், மனைவியாக லலிதாவும் நடித்தனர்.

சினிமாவில் நடிக்க மாட்டோம் என்றவர்கள் காலப்போக்கில் சினிமாவுக்குள் முழுமையாக மூழ்கினார்கள்.

## மாற்று அரசாங்க ஏற்பாடு

ஜேர்மனியில் மாற்று அரசாங்க ஏற்பாடு இல்லாமல் பதவியிலுள்ள அரசாங்கத்தை வீழ்த்த முடியாது. பதவியிலுள்ள அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரும்போது மாற்று அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்துவதற்கான ஏற்பாடும் இருக்க வேண்டும். அதற்கான வாக்களிப்பும் சமகாலத்தில் இடம்பெற வேண்டும்.

# யா /வயாவிளான் மத்திய கல்லூரி




2015ஆம் ஆண்டிற்கான மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பெண்கள் இறுதியாட்டத்தில் யாழ்.மகாஜனக் கல்லூரியை எதிர் கொண்டு முதலாவது சுற்றில் 23 இற்கு 25 என்ற செற் கணக்கிலும் இரண்டாவது சுற்றில் 24இற்கு 26 என்றசெற் கணக்கிலும் மிகவும் பலமான போட்டியின் மத்தியில் இரண்டாம் இடத்தினைத் தழுவியது.

இதேபோல் 17 வயதுப் பெண்களுக்கான போட்டியில் யாழ்.கோப்பாய் மகாவித்தியாலயத்தினை எதிர்கொண்டு முதற்சுற்றில் 25 இற்கு 20 என்ற சொற் கணக்கில் வெற்றி பெற்று அடுத்து நடைபெற்ற இரண்டாம் சுற்றுக்களிலும் 23இற்கு 25, 25இற்கு 27 என்ற செற்கணக்கில் மிகவும் விறுவிறுப்பாக விளையாடி இரண்டாம் இடத்தினைப் பெற்றனர் இவ்வணிகள் இப் பாடசாலையில் இருந்து இரண்டாவது தடவையாகவும் தேசியமட்டம் செல்வதற்கு வழியமைத்த பாடசாலை அதிபர், பொறுப்பாசிரியர்கள்,பெற்றோர்கள், பழையமாணவர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.



பாடசாலை அதிபர்
வே.த.ஜயந்தன்

**வலய, மாவட்ட மற்றும் மாகாணமட்டத்தில் சாதனை படைத்து இரண்டாவது தடவையாக மீண்டும் தேசியமட்டத்திற்கு நகர்ந்தது யா– வயாவிளான் மத்திய கல்லூரி**

நடந்து முடிந்த மாவட்டமட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுத்தொடரில் 17 வயதின் கீழ் பெண்கள் அணி மாவட்டமட்டத்தில் சம்பியனாகியது. அத்துடன் 19 வயதின்கீழ் பெண்கள் அணி மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதன் பேறாக இவ்விரு அணிகளும் மாகாணமட்டத்திற்கு தெரிவாகியது.

யாழ்.வயாவிளான் மத்திய கல்லூரியின் 19 வயதுப் பிரிவு, 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்ட அணியினர் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்று தேசியமட்டத்திற்கு தெரிவாகி உள்ளனர்.











வடமாகாண கல்வியமைச்சர் பங்குபற்றிய பாடசாலை நிகழ்வு



ஆயர் உட்பட வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்வு






## வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதல் இடங்களைப் பெற்று மாகாணத்திற்கு செல்லும் பிரிவுகள்

இசை குழு பிரிவு 2 முதலாம் இடம்
நடனம் குழு (நாட்டியநாடகம்) பிரிவு 2 முதலாம் இடம்
நடனம் தனிபிரிவு 2 முதலாம் இடம்
நடனம் தனிபிரிவு 5 முதலாம் இடம



# பண்ணாகம் கொலை வழக்கு சந்தேக நபருக்கு விடுதலை

## நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு



பண்ணாகம் அழகரட்னம் சிவ ராஜா கொலை வழக்கில் கண் கண்ட சாட்சியமோ அல்லது சந் தர்ப்ப சூழ்நிலை சாட்சியமோ முன்வைக்கப்பட்டு குற்றம் நிரூபிக்கப்படாத காரணத்தினால் எதிரியாகக் குற்றம் சாட்டப் பட்டவரை நீதிபதி இளஞ்செழியன் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளார்.

யாழ். மேல் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை நிறைவு பெற்ற இந்த வழக்கு விசாரணையின் முடிவில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி பண்ணாகம் என்னும் இடத்தில் அழகரட்னம் சிவராஜா என்பவரை கொலை செய்ததாக, சின்னத்தம்பி சிவபாதம் என்பவர் மீது, குற்றம் சுமத்தி சட்டமா அதிபரினால் யாழ் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் அங்கு பணியாற்றிய நீதவான் கஜநிதிபாலன் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடாத்தப்பட்டிருந்தது. இந்த அடையாள அணிவகுப்பின் போது, இரண்டு பேர் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவராகிய கிருஸ்ணன் ஜெகேந்திரன் என்ற சாட்சி, எதிரியை அடையாளம் காட்டியிருந்தார். ஆயினும் மற்றுமொரு சாட்சி எதிரியை அடையாளம் காட்டவில்லை.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தியிருந்ததையடுத்து, இந்த அடையாள அணிவகுப்பை நடாத்திய மல்லாகம் நீதவான் கஜநிதி பாலன் நடாத்திய அடையாள அணிவகுப்பு அறிக்கையை சான்றாக அடையாளமிட்டு சாட்சியமளிப்பதற்காக முக்கிய சாட்சி மேல் நீதிமன்றத்தினால் அழைக்கப்பட்டிருந்தார். மேல் நீதிமன்றத்தின் அழைப்பையேற்று மன்றில் முன்னிலையாகியு நீதவான் கஜநிதிபாலன், அவர் நடாத்திய அடையாள அணிவகுப்பு அறிக்கையை இந்த வழக்கின் முக்கிய சான்றாக இலக்கமிட்டு சாட்சியமளித்தார்.

இதனையடுத்து, அடையாள அணிவகுப்பில் எதிரியை அடையாளம் காட்டிய சாட்சியாகிய கிருஸ்ணன் ஜெகேந்திரன் இங்கு சாட்சியமளித்தபோது, எதிரியும் இறந்தவரும் வாய்ச்சண்டை பிடித்ததைக் கண்டதாகவும், ஆனால், இறந்தவருக்கு எப்படி இறப்பு நேர்ந்தது என்பதைக் காணவில்லை எனத்தெரிவித்தார்.

இதனையடுத்து, இந்த வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சிவில் மற்றும் பொலிஸ் சாட்சியங்களில் எதிரிதான் இந்தக் கொலையைச் செய்தார் என்று நேரடியாகக் கண்ட சாட்சியமாகவோ அல்லது சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்களாகவோ முன் வைக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டிய நீதிபதி இளஞ்செழியன், இந்த வழக்கில் சாட்சியமளித்த மல்லாகம் நீதவான் கஜநிதிபாலன் சான்றுப் பொருளாக இலக்கமிட்ட அடையாள அணிவகுப்பு அறிக்கையை மட்டும் வைத்து கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று தீர்மானிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

அத்துடன், மல்லாகம் மாவட்ட நீதவான், அடையாள அணிவகுப்பை கடமையின் நிமித்தமே செய்தார். அவர் நேரடியாகக் கொலைசசம்பவத்தைப் பார்க்கவில்லை. கொலை நடைபெற்றதை நேரடியாகக் கண்ட சாட்சிகள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவில்லை.

எனவே, இந்தக் கொலைச் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரிதான், இந்தக் கொலையைச் செய்தார் என்பதற்கான சரியான சாட்சியங்கள் எதுவும் முன் வைக்கப்படாதபடியினால், வழக்குத் தொடுநர் இந்த வழக்கில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் குற்றத்தை நிருபிப்பதற்குத் தவறிவிட்டார் என கூறிய நீதிபதி இளஞ்செழியன், எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் எதிரி தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவும், அரச தரப்பில் அரச தரப்பு சட்டத்தரணி திருமதி நளினி சுபாகரனும் முன்னிலையாகியிருந்தனர்.

(137)

## அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் க.பொ.த. (உ\த) 2015 இல் பரீட்சைக்கு தோற்றவுள்ள கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வழங்கி வைக்கப்பட்டன என கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

## வெள்ளி நற்சிந்தனை...



## தர்மத்திற்கு இரண்டு உருவங்கள் - 2

வீட்டிலுள்ள கடவுள் படங்களைத் தொழுதாலே போதாதா? எதற்காக அலுவலகங்களிலும் கடவுள் படங்கள்ள வைத்து வணங்க வேண்டும் என்று சிலர் கேட்கலாம்.

இன்றைய மனிதனுக்கு அவனுடைய வாழ்க்கையில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளுக்கு அவன் அலுவலகத்திலிருந்து செய்யும் வேலைகள் அடிப்படையாகின்றன. அலுவலகத்தில் அவன் எடுத்துக் கொள்ளும் தீர்மானங்கள், வேலை செய்யும் திறமை மேலதிகாரிகளோடு எப்படி ஒத்துப்போவது, தனக்குக்கீழ் வேலை செய்பவர்களுக்கு என்னென்ன சலுகைகள் கொடுத்தால் அவர்களுக்கு நன்மைகள் உண்டாகும், அலுவலகப் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ளாமல் இருப்பதெப்படி போன்றவை இன்றைய அலுவலக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் சந்திக்கும் சவால்கள்.

இவற்றைச் சமாளிக்க மனிதனின் புத்திசாலித்தனம் மட்டும் போதாது. இவற்றுக்கு கடவுளின் துணை மிகவும் தேவை. அலுவலக சம்பந்தப்பட்ட வேலைக்கெல்லாம் கடவுளின் துணையை நாடலாமா? என்கின்ற கேள்வி எழும் தடங்கல் இல்லாமல் காரியம் நடக்கத் தாராளமாகப் பிள்ளையாரை வேண்டலாம். கடன் தொல்லை நீங்க, பணம் பெற மகாலெட்சுமி, தர்மமாக நடக்க இராமன படம், பணியைத் திறமையாகச் செய்து அதே சமயம் அதன் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்க கண்ணன் மொத்தமாகச் சொல்லப் போனால் கடின உழைப்போடு தெய்வ அருளும் சேரும் போது எல்லாமே மகிழ்வோடு அமைகிறது.ஆகவே, அலுவலகத்தில் கடவுள் படங்கள் மிகவும் தேவையே.

தேவைகளைப் பெருக்கிக் கொள்வதால் துன்பங்களும் அதிருப்தியும் ஏற்படுகின்றன. எளிய வாழ்க்கையில் தான் மகிழ்ச்சியைக் காண முடியும். இத்தகைய வாழ்க்கையை, இறையுணர்வுடன் கலந்த வாழ்க்கையைப் பெறுவதற்கு ஆலயங்கள் உதவுகின்றன.

உலக வழக்கில் ஒருவர் ஒரு உதவியைச் செய்தால், அவருக்கு நன்றி செலுத்திப் பெருமைப்படுத்துகின்றோம். இந்த உலகத்தைப் படைத்து, நமக்கு வேண்டிய வசதிகளையும் வழங்கியுள்ள இறைவனுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டாமா?

அதற்கு அறிகுறியாகத்தன் இறைவனுக்கு நிவேதனமும், காணிக்கைகளும் செலுத்துகின்றோம். இறைவன் அவற்றை வேண்டா விட்டாலும் நமது கடமை அது. சிறந்தனவற்றை நாம் விரும்பி உண்பது போல, இறைவனுக்கும் சிறந்த பொருள் களையே நிவேதனம் செய்ய வேண்டும் எல்லா மக்களும்தங்கள் வீட்டில் பூசை செய்வது என்பது இயலாது. எல்லோரும் கூடித் தங்கள் நன்றியைச் செலுத்த வாய்ப்பளிக்கும் முறையில் தான் கோவில்கள் எழுந்தன.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

## பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு மேதை தன் சூழலின் இயல்பான தொடர்ச்சியாக இருப்பதில்லை. தனக்கு தன் பிறப்பும் சூழலும் அளித்த எல்லா கட்டுப்பாடுகளையும் சாதாரணமாக மீறுகிறான். எங்கிருந்து வந்தது, எப்படி உருவாயிற்று என்ற திகைப்பை அவன் உருவாக்கி அளித்துவிடுகிறான். தான் வாழும் காலகட்டம் முற்றிலும் மறைந்த பின்னரும் தன் கலைப்படைப்புகள் மூலம் அழியாமல் இருந்துகொண்டிருக்கிறான். விஸ்வநாதன் அத்தகையவர். குறைந்தது இரண்டாயிரமாண்டு இசைமரபுள்ள மொழி தமிழ். அதில் கர்நாடக சங்கீதம் இன்றைய வடிவைப் பெற்று இருநூறு வருடங்கள் தாண்டிவிட்டன. இசை என்றாலே மரபான ராகங்கள்தான் என்றிருந்த சூழல் இது. எம்.எஸ்.விக்கு முந்தைய இசையமைப்பாளர்கள் பலர் ஒரு ராகத்தின் சிறுபகுதியை எடுத்து வரிகளுக்குப் பொருத்திவிட்டால் பாடலாகிவிட்டது என்று எண்ணி செயல்பட்டனர். விஸ்வநாதனின் இசை ஒரு போதும் மரபான இசைவடிவங்களுக்குள் அடங்குவதில்லை. அந்த புதிய இசையை அடையாளப்படுத்தியாக வேண்டிய கட்டாயம் உருவாயிற்று. அவ்வாறு உருவாக்கப்பட்ட ஒரு சொல் தான் மெல்லிசை. அதற்கு அவர் மன்னர் ஆனார்.

– ஷாஜி

கிட்டப்பா, பாபநாசம் சிவன், எம்.கே.தியாகராஜ பாகவதர், பி.யு.சின்னப்பா தொடங்கி தமிழ் வெகுஜன இசையில் பெரும் மேதைகளும் கலைஞர்களும் இருந்திருக்கிறார்கள். அந்த வரிசையில் ஜி.ராமநாதனுக்குப் பிறகு வந்த இரண்டு மேதைகள் கே.வி.மகாதேவனும் எம்.எஸ்.விஸ்வநாதனும் ஆவர். சுமார் இருபது ஆண்டுகள் தமிழ்ச்சினிமாவின் சிகரத்தில் இருந்தவர் எம்.எஸ்.வி.

ஒருமுறை என்னிடம் ஒரு இயக்குநர் சொன்னார், நினைக்கத் தெரிந்த மனமே (ஆனந்த ஜோதி) என்ற ஒரே ஒரு பாடலுக்குத் தமிழ்ச்சினிமாவில் வந்த அத்தனை பாடல்களையும் ஒன்று சேர்த்தாலும் ஈடாகாது என்று.

தமிழர்களின் காதலை, பாசத்தை, துக்கத்தை, துயரத்தை, கொண்டாட்டத்தை, வீரத்தை, வேதனையை, மகிழ்ச்சியை, தனிமையை, பக்தியை, கேலியை, கிண்டலை இசையாக மாற்றிக்கொடுத்த மேதையான எம்.எஸ்.வி.யின் பூத உடல் இன்று மறைந்துபோனாலும் அவரது இசை, தமிழ் உள்ளளவும் இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

– சாரு நிவேதிதா

ஏதோ ஒரு திரைப்படத்தில் சந்தானம் கண்களை மூடி நாக்கை சப்புக்கொட்டி 'தேன்........" என்பார் அல்லவா? அப்படியிருக்கின்றன 'காதலிக்க நேரமில்லை' படத்தில் அத்தனை பாடல்களும். விஸ்வநாதன்–ராமமூர்த்தி ஜோடி அந்தக் காலத்தில் அதகளப்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு இந்த ஒரு படமே சிறந்த உதாரணம். இந்தப் பாடல்கள், தமிழிசை மரபு சாராது ஐரோப்பிய பொப் இசையின் நகல்கள் என்பது தெளிவாகத் தெரிந்தாலும் அதை தமிழ் சூழலுக்கு ஏற்றவாறு உருமாற்றம் செய்ததற்கு இந்த இசை ஜோடிக்கு றோயல் சல்யூட்.

நானும் ராஜா காலத்தியவன் என்பதால் விஸ்வநாதனை அந்தக் காலத்தில் அதிகம் கேட்டதில்லை. ஆனால் பாடல்களைக் கேட்டு கேட்டு சற்று ருசி வந்த பிறகு விஸ்வநாதன் எத்தனை ஜகஜ்ஜால கில்லாடி என்பதும் ராஜாவெல்லாம் அதற்குப் பின்னால்தான் என்பதும் சமீப காலங்களில்தான் புரிந்தது.

– சுரேஷ் கண்ணன்

தமிழ் காதுகள் கேட்டிராத சப்தங்களை என்னுடைய காலத்தில் ரகுமான் கொண்டுவந்தார் என்றால், எனக்கும் முந்தைய தலைமுறைக்கு எம்.எஸ்.விதான் கொண்டு வந்தார். இளையராஜா அதன் செவ்வியல் வடிவினை நோக்கி நகர்ந்தார். உலக இசை அதன் தமிழ் வடிவில் (ஆம் அசல் வடிவில் அல்ல தமிழ் வடிவில்) எம்.எஸ்.வியால் தமிழுக்கு வழங்கப்பட்டது.

'பட்டத்து ராணி' பாடலில் துள்ளும் எகிப்திய இசையும், 'நினைத்தேன் வந்தாய் நூறு வயது' பாடலில் வேகமெடுக்கும் பெர்சியன் இசையும் 'பன்சாயி காதல் பறவை'கள் பாடலில் கொஞ்சும் ஜப்பானிய இசையும், 'யார் அந்த நிலவு' பாடலில் உருகும் லத்தீன் இசையும், 'கண் போன போக்கிலே கால் போகலாமா'வில் வரும் ரஷ்ய பாலே இசையும், 'துள்ளுவதோ இளமை' பாடலின் மெக்சிகன் ஓர்கனும் அற்புதமான இசை வார்ப்புகள்.

எல்லா கலைகளும் இசையின் தன்மையை அடைய முயல்கின்றன என்றவன் எவனோ அவனை வணங்குகிறேன். இசையே மானுடன் தேடிய கலையின் உச்சபட்ச நேர்த்தியான வடிவம் என்றால், எம்.எஸ்.வி ஒட்டுமொத்த தமிழ்கலைக்கும் பெருந்தலைவன்.

– இளங்கோ கிருஷ்ணன்

# கிராமங்களின் அபிவிருத்திக்கு 20 வருடங்களாக முன்னுரிமை இல்லை

## மல்வத்த மகாநாயக்கர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

கடந்த 20 வருடங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான அரசாங்கம், கிராம அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கவில்லை என்று மல்வத்த மகாநாயக்கர் தெரிவித்துள்ளார் மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவாவே சித்தார்த்த ஸ்ரீ சுமங்கல தேரரிடம் நேற்று முன்தினம் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆசிபெறச் சென்ற போதே இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படாமல், விமான நிலையமும் துறைமுகமும் அமைக்கப்பட்டது.

இதன்காரணமாகவே மக்கள் முன்னைய அரசாங்கத்துக்கு வாக்களிக்கவில்லை

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பொறுத்த வரையில் அந்தக்கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படும் போது தமது கை சின்னத்தை மறந்து போயுள்ளது.

இது மாற்றியமைக்கப்பட வேண்டும். கை சின்னமே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அடையாளப்படுத்தும் சின்னமாக அமையும் என்றார்.

இதன்போது கருத்துரைத்த பிரசன்ன ரணதுங்க, சந்திரிகா குமாரதுங்க ஆட்சியில் இருந்தபோதே அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. எனினும் மகிந்த ஆட்சியின் போது கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்தச் சென்ற முதலமைச்சருக்கு எதிர்ப்பு

ஆர்ப்பாட்டமொன்றைக் கட்டுப்படுத்துவதற்காகச் சென்றிருந்த வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகரவிற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

வீதி புனரமைக்கப்படாமையே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமைக்கான காரணமாகும்.

குருநாகல் கட்டுபிட்டிய இம்புல்கொட வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குருநாகல் – கண்டி பிரதான வீதியை மறித்து இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை பொலிஸாரினால் கட்டுப்படுத்த முடியாது போனது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் வீதியை புனரமைத்துத் தருவதாக எழுத்து மூலம் வாக்குறுதி வழங்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். பின்னர், குறித்த இடத்திற்கு வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர சென்றிருந்தார்.

அவருக்கு மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்றிருந்த வடமேல் மாகாண வீதி அபிவிருத்திப் பணிப்பாளர் வீதியை புனரமைத்துத் தருவதாக வாக்குறுதி அளித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றுள்ளனர்.

# பாலூட்டியபடி வாகனம் செலுத்திய பெண்ணுக்கு விளக்கமறியல்





தனது இரண்டரை வயதுக் குழந்தைக்கு பாலூட்டியபடி வாகனம் செலுத்திய பெண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாலபே – பிட்டுகல பகுதியில் இரண்டு போக்குவரத்து பொலிஸாருக்கும் பெண்ணொருவருக்கும இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் நேற்று வெளியாகியுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பெண், நேற்று முன்தினம் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, அவர் எதிர்வரும 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாலபே தகவல் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு முன்பாக ஒரு நபரினால் குறித்த காணொளி பதிவு செய்யப்பட்டுள்ளது.

38 வயதான சாமிலா கயானி அமரசிங்க என்ற பெண்ணே இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளார். தனது மூத்த மகளை மேலதிக வகுப்பிலிருந்து மீண்டும் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் நோக்குடன் மாலபேயிலிருந்து கடுவளை நோக்கி காரில பயணித்துள்ளார்.

கடுவளை பகுதியைச் சேர்ந்த குறித்த பெண், தனது இரணடரை வயதுடைய மகளுக்கு தாய்ப்பாலூட்டிய வண்ணம் வாகனத்தை செலுத்தியுள்ள தாக பொலிஸார் அவர் மீது குற்றஞ் சாட்டியுள்ளனர்.

சுமார் 10 நிமிடங்கள் வரை பொலிஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்ட அந்தப் பெண், பின்னர் அங்கிருந்து சென்றுள்ளார்.

அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்க முற்பட்டமை, திருட்டு மற்றும் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தலங்கம பொலிஸாரினால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டன. நீதிமன்றத்திற்கு விடயங்கள தெளிவுபடுத்தப்பட்டதை அடுத்து, குறித்த பெண்ணை 28ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன் றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அப்பெண்ணுக்கு வாகனத்தை செலுத்த அனுமதி வழங்கியமை தொடர்பில் அவரது கணவர கைது செய்யப்பட்டு, ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணை யில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேகநபரான பெண் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பது தொடர்பிலான அறிக்கையொன்றை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக் குமாறும் பொலிஸாருக்கு உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# கோப் ஆணைக்குழு அறிக்கையை பகிரங்கப்படுத்த இடைக்காலத்தடை

(கொழும்பு)

மத்திய வங்கியின் பிணைமுறி குறித்த கோப் ஆணைக்குழு அறிக்கையை பிரசாரம் செய்யவோ பகிரங்கப்படுத்தவோ இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றினால் நேற்று இந்த இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் அறிக்கை பற்றிய விபரங்களை வெளியிடவோ பிரசாரம் செய்யவோ கூடாது என இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.யூ. குணசேகர தலைமையில் கோப் ஆணைக்குழு விசாரணை நடத்தியிருந்தது.



மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல்களில் பாரியளவு மோசடி இடம்பெற்றுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆனந்தமாய்க் கொண்டாடிடும் ஆடிப்பிறப்பு இன்று

இன்று ஆடி மாதம் பிறக்கின்றது. இந்த ஆடிப்பிறப்பானது வந்துவிட்டால் கூடவே விரதங்களும் விழாக்களும் வரத் தொடங்கிவிடும். ஆடிப்பிறப்பிலிருந்து ஆடிப்பூரம், ஆடிச் செவ்வாய், ஆடி அமாவாசை, ஆடிக்கிருத்திகை என்று தொடர்ந்து நல்ல நாள்களே வரும். ஆனந்தமாய்க்கொண்டாடும் இன்றைய ஆடிப்பிறப்பு நன்னாள் ஒரு புனித புண்ணிய நன்னாளாகும் இதை மிக்க மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும்.

தைமாதம் பிறந்தவுடன் இனிப்பான சர்க்கரைப் பொங்கல் பொங்கிப்படைத்து சூரிய வழிபாடு செய்வது போல இந்த ஆடி பிறந்தவுடன் பனங்கட்டி, பயறு, சர்க்கரை, அரிசிமா, உழுந்துமா, முழு உழுந்து கஜு, பிளம்ஸ் கலந்து காய்ச்சிய கூழ் இறைவனுக்கு நிவேதித்து ஆடியை வரவேற்று மகிழ்வர். கொழுக்கட்டை மோதகமும் வைத்து வழிபாடியியற்றுவர்.

வருடத்தில் வரும் பன்னிரு மாதங்களில் ஆடிமாதம் மிகச் சிறப்பானதாகும். தேவர்களுக்கு தை முதல் ஆனிவரை பகற்பொழுதாகும். இது உத்தராயணம் எனப்படும். ஆடி முதல் மார்கழி வரை இரவுப்பொழுதாகும் இது தட்சணாயனம் எனப்படுகிறது.

மேலும் முருகனுக்குரிய ஆடிவேல் விழா மிகவிசேடமானது. இந்த ஆடி மாதத்திலேயே அம்பிகை ருதுவானதாக ஆடிப்பூரம் கொண்டாடப்படுகிறது.

இந்த ஆடிப்பிறப்பின் மேன்மையை உணர்த்துவதாக நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆடிபிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே கூடிப்பனங்கட்டிக் கூழுங்குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!! என்று பாடுவதைக் குறிபபிட்லாம்.

ஆடிமாதத்தில் வரும் செவ்வாய்க்கிழமை வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பானவை என்று சொல்லப்படுகிறது. இளமங்கையர் தமக்கு விரைவில் விவாகம் ஆக வேண்டுமென்று விரதமிருந்து அம்பிகையை வழிபடுவதும் இந்நாளிலேயே.



ஆடி அமாவாசை பித்ருகனை வணங்கி வழிபாடியற்றி அறுசுவை உணவு படைக்கும் நாளாகும். தந்தையின் ஆத்மா சாந்தி பெறவேண்டுமென்று விரதமிருந்து எள்ளும் தண்ணீரும் இறைத்து வணங்குவது வழக்கம் இந்த நாளில் வில்லூன்றி கீரிமலை முதலான புனித புண்ணிய நீரில் நீராடி பிதிர்களுக்குப் பிரீதி செய்வதும் முறையாகும்.

ஆடி மாதத்தில் வருகின்ற ஆடிப்பெருக்கு வைபவமும் ஒரு சிறப்புக்குரிய நல்ல வைபவமாகும். ஆடி பிறந்து 18 ஆம்நாள் இது கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் இது மிக விசேடமாகக் கொண்டாடப்படுகிறது.

இப்படியாக இன்று பிறந்திருக்கும் ஆடி மாதத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைத்துக் கொண்டே போகலாம் இது ஒரு நல்ல சிறப்பு மிக்க திருநாளாகும். இன்றைய ஆடிப்பிறப்பை சிரந்தாழ்த்தி வரவேற்று, கரங்கூப்பி வணங்கி வாழ்த்தி இனிமேலாவது துன்பதுயரங்கள் நீங்கி நாம் நல்ல சந்தோஷம் மிக்க மகிழ்ச்சியான மங்களகரமான வாழ்க்கையை வாழ இறையாசி கிட்ட வேண்டும் என்று சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்போமாக!.

**“கலாபூஷணம்”**
**“தெய்வத் தமிழ்ச்சுடர்”**
**இராசையா ஸ்ரீதரன்**

# க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை
# G.C.E. (O/L) Examination model Paper
## ( 1 புள்ளி, 2 புள்ளி திட்ட வினாக்கள் )

ஆசிரியர் : த.சுஜிகரன்

பகுதி I

## கணிதம்

01. ஒருவர் $\frac{10}{9}$ m/s கதியில் நடந்து செல்கிறார் இதற்கு ஏற்ப அவர் 3 நிமிடத்தில் செல்லும் தூரத்தைக் காண்க

02. தீர்க்க $9^{x-1} = 3^4$

03. மட $5^3 = x$ எனின் மட $5^{15}$ இன் பெறுமானத்தை X இன் சார்பில் தருக?

04. 35cm விட்டமுள்ள சில்லு ஒன்று 10 சுற்றுக்கள் உருண்டன அச்சில்லு உருண்ட தூரத்தைக் காண்க

05. சுருக்குக $(8)^{\frac{2}{3}} \times 16^{\frac{3}{4}}$

06. $X = \lg 8, y = \lg \frac{9}{4}, z = \lg \frac{9}{5}$ எனின் மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல் $(x+y-z)$ இன் பெறுமானத்தைக் காண்க

07. சுருக்குக $(8)^{\frac{2}{3}} \times 16^{\frac{3}{4}}$

08. $4^{2x-1} = 8^x$ எனின் x இன் பெறுமானத்தைக் காண்க

09. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல் சுருக்குக
$2$ மட$_{10}$ $20 - 3$மட$_{10}$ $4 +$ மட$_{10}$ $16$

10. சுருக்குக $\left[\frac{25}{64}\right]^{\frac{1}{2}}$

11. சுருக்குக $\left(\frac{125x^3}{64y^6}\right)^{\frac{1}{3}}$

12. சுருக்குக $\left(\frac{27}{1000}\right)^{2/3}$

13. $3^{(x-1)} = 9$ எனின் X இன் பெறுமானத்தைக் காண்க


14. $4^{(2x-1)} = 8$ எனின் X இன் பெறுமானத்தைக் காண்க

15. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல் சுருக்குக
$2\lg 5 + 1\lg 4$

16. $\lg x - \lg 2 = \lg = 3 + \lg 5$ எனின் மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல் பெறுமானம் காண்க

17. X ஒரு நேர்நிறை எண் எனின் $x + 2 \leq 6$ ஐ திருப்தியாக்கும் x இன் இரு பெறுமானங்களை எழுதுக


18. உருவில் சுற்றளவு யாது?





19. ஒரு பக்கநீளம் 3cm உடைய சமபக்க முக்கோணம் ஒன்றின் சுற்றளவு யாது?

20. 36cm சுற்றளவுடைய சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் யாது?


21. உருவின் சுற்றளவைக் காண்க





22. உருவின் சுற்றளவைக் காண்க





23. $\triangle ABC$ சுற்றளவு யாது?





24. உருவில் காணப்படும் ஆரைச்சிறையின் சுற்றளவு யாது?




25. உருவில் காணப்படும் ஆரைச்சிறையின் சுற்றளவு யாது?




26. உருவின் சுற்றளவு 36cm எனின் x இன் பெறுமானத்தைக்காண்க




27. $\sqrt{17}$ இன் பெறுமானத்தை 2ம் தசமதானத்திற்கு காண்க

28. $(X+3)^2$ இன் விரிவை எழுதுக

29. $(2x-1)^2$ இன் விரிவை எழுதுக

30. $x^2 - 16x + 64$ என்னும் கோவையை நிறைவர்க்க கோவையாக எழுதுக

31. $a^2 - 14ab + 49b^2$ என்னும் கோவையை நிறைவர்க்க கோவையாக எழுதுக

32. சுருக்குக $(4x+3y)(3x-2y)$

33. சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் X அலகுகள் ஆகும். அதன் நீளத்தில் 3 அலகுகள் குறைத்து செவ்வகம் ஒன்று ஆக்கப்பட்டுள்ளது செவ்வகத்தின் பரப்பளவு யாது?


34. 2/3 என்பதை மீளும் தசமமாகத் தருக?

35. 0.375 எனும் தசமத்தை பின்னமாகத் தருக?


36. 3/5 எவ்வகை தசமம் என்பதை காரணங்களுடன் கூறுக

37. $\frac{7}{15}$ ஐ மீளும் தசமமாக எழுதுக

38. உருவின் பரப்பளவு யாது?





39. உருவின் பரப்பளவு யாது?





40. 100$cm^2$ பரப்பளவு உடைய சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் யாது?


41. உருவின் ABCயின் யாது?




42. உருவில் உள்ள $\triangle ABC$யின் பரப்பளவு யாது?





43. உருவில் உள்ள சரிவகம் PQRS இன் பரப்பளவு யாது?





44. சாய்சதுரம் ஒன்றின் மூலைவிட்ட நீளங்கள் முறையே 10cm, 8cm ஆகும் எனின் அச்சாய் சதுரத்தின் பரப்பளவு யாது?

45. உருவின் பரப்பளவு யாது?




46. 7cm ஆரையுடைய வட்டத்தின் பரப்பளவு யாது?

47. உருவில் உள்ள ஆரைச்சிறையின் பரப்பளவு யாது?




48. காரணி காண்க? $2x^2 - x - 6$

49. $5a^2 - 16ab + 3b^2$ இனை காரணிப்படுத்துக?

50. $X^2 + 6x$ னை நிறைவர்க்க கோவையாக எழுத கூட்ட வேண்டிய மாறா உறுப்பு யாது?

51. $m^2 - 10m$ இனை நிறைவர்க்க கோவையாக எழுத கூட்ட வேண்டிய மாறா உறுப்பு யாது?

52. வெற்றிடத்தை நிரப்புக $(x + .....)^2 = x^2 + 6x + 9$

53. வெற்றிடத்தை நிரப்புக $a^2 + ..... + \frac{25}{4} = (.... + .....)^2$

54. $X + y = 9$, $xy = 20$ எனின் $x^2 + y^2$ இன் பெறுமானம் யாது?

55. $a = b = 4$, $ab = 3$ எனின் $a^2 + b^2$ இன் பெறுமானம் யாது?

56. $x + \frac{1}{x} = 5$ எனின் $\frac{1}{x^2} + x^2$ இன் பெறுமானம் யாது?

57. $a - b = 6$, $ab = 3$ எனின் $a^2 + b^2$ இன் பெறுமானம் யாது?

58. $24a^2 b^2$, $6ab$, $3a^3 b^3$ இன் பொ.ம.சி ஐ காண்க

59. $x^2 (x + 1)$ . $xy (x - 1)^2$ $x^2y^3 (1 - x)$ என்பவற்றின் பொ.ம.சி ஐ காண்க?

60. சுருக்குக $\frac{2x - 5}{9} + \frac{x - 5}{6}$

61. சுருக்குக $\frac{3x - 1}{4} + \frac{2x - 1}{8}$

62. சுருக்குக $\frac{x}{2} + \frac{x}{3} \div \frac{x}{4}$

63. $\frac{2}{x + 4} + \frac{7}{x^2 y^2}$ ஐ சுருக்குக

64. $y = x^2 + 3$ என்னும் வரைபை வரையாமல் திரும்பல் புள்ளியின் ஆள்கூற்றை எழுதுக

65. $Y = -x^2 - 3$ என்னும் வரைபின் உயர்வுப் பெறுமானம் யாது?

66. $y = x^2$ என்னும் வரைபு x அச்சின் வழியே +3 அலகுகளும் y அச்சு வழியே +1 அலகும் இடம்பெயர்ச்சி அடைந்தால் அவ்வரைபின் சமன்பாட்டை எழுதுக

67. 8, 15, 22, 29 .............. என்ற விருத்தியின் பொது உறுப்பு யாது?

68. 8, 16, 24 .................... என்ற விருத்தியின் 15ஆவது உறுப்பு யாது?

69. 18, 22, 26, 30 ................ என்னும் விருத்தியின் 74 எத்தனையாவது உறுப்பு ஆகும்

70. 11, 36 என்பவற்றின் கூட்டல் இடையைக் காண்க

71. -32, 18 என்பவற்றின் கூட்டல் இடையைக் காண்க

72. 2, 14இற்கு இடையில் 2 கூட்டல் இடையைப் புகுத்துக

73. 6, 10, 14 ............. என்ற விருத்தியின் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?

74. 36km / h என்பதை m/s இல் தருக?

75. 60m நீளமான புகைவண்டி 4 செக்கனில் மின்கம்பம் ஒன்றை கடக்கின்றது அது நீளமான மேடையை முற்றாக கடப்பதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு?

76. ஒரு மோட்டார் கார் முதல் 30km ஐ $40kmh^{-1}$ இலும் அடுத்த 40km ஐ $30km^{-1}$ இறுதி 70km ஐ $60kmh^{-1}$ கதியிலும் பயணம் செய்தால் மோட்டார் சைக்கிளின் சராசரி கதியைக் காண்க

77. 1:50000 என்னும் அளவிடையில் வரையப்பட்டுள்ள அளவிடைப்படத்தில் இருநகரங்களுக்கிடையிலான தூரம் 5cm எனின் அந்நகரங்களுக் கிடையிலான உண்மைத்தூரம் யாது?

78. $3\sqrt{5}$ இனை முழுமை சேடாக தருக?

79. $\sqrt{20}$ இனை எளிய சேடு வடிவில் தருக?

80. $\sqrt{2} = 1.414$ எனின் $\frac{3}{\sqrt{2}}$ இன் பெறுமானம் காண்க

81. பெறுமானம் காண்க $(36)^{1/2}$

82. பெறுமானம் காண்க $(49)^{0.5}$

83. சுருக்குக $3\sqrt{X^3} \times \sqrt{X^2}$

84. $81^{-\frac{1}{4}}$ இன் பெறுமானத்தைக் காண்க

85. பெறுமானம் காண்க $\frac{64}{343}^{2/3}$

86. X இன் பெறுமானத்தைக் காண்க $8^{2x-1} = \frac{1}{64}$

87. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல் பெறுமானம் காண்க $\lg 50 + 3\lg 2 - 2\lg 2$

88. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல் பெறுமானம் காண்க $\frac{1}{2}\log 25 \times \frac{1}{2}\lg 400$

89. தீர்க்குக $2\lg x = 4\lg 3$

90. பக்கநீளம் 6cm உடைய சதுரமுகி ஒன்றின் கனவளவு யாது?

91. ஆரை 7cm உம் செங்குத்துயரம் 10cm உடைய ஒருகூம்பின் கனவளவு யாது?

92. ஆரையுடைய கோளத்தின் கனவளவைக் காண்க

93. $(P + q)^3$ இன் விரிவை காண்க

94. $a + b = 5$, $ab = 6$ எனின் $a^3 + b^3$ இன் பெறுமானத்தை காண்க

95. $x^2 + x - 2$, $2x^2 + 3x - 2$, $2x^2 - 3x + 1$ என்பவற்றின் பொ.ம.சியைக் காண்க

96. சுருக்குக $\frac{1}{x^2 + 3x - 10} + \frac{1}{4 - x^2}$

97. சுருக்குக $\frac{x^2 + x - 12}{x^3 - 64} \div \frac{X^2 - x - 6}{x^2 - 8x + 16}$

## சென்றவாரம் பிரசுரமாகிய க.பொ.த சா/த வினாக்களின் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. $Y = X + 1$ | 02. $M = 2$, $C = 2$ | 03. $6.0 \times 10^{-3}$ |
| 04. $6.855 \times 10^{-2}$ | 05. $2.1 \times 10^{-3}$ | 06. 2000 |
| 07. 0.0723 | 08. 2890 | 09. 2900 |
| 10. i. 2.84 ii. 2.8 | 11. 200 | 12. (-5) |
| 13. 8 | 14. (-6) | 15. (-16) |
| 16. 11 | 17. (-8) | 18. (-125) |
| 19. 16 | 20. (-20) | 21. 9 |
| 22. 2 | 23. 3 | 24. (-32) |
| 25. (-32) | 26. 0.33 | 27. 4 |
| 28. 3 | 29. 8 | 30. 25 |
| 31. 1,3,6,10,15 | 32. 16 | 33. 4 |
| 34. 16km | 35. 375.00 | 36. 120,000.00 |
| 37. 80km / h | 38. C = (5,0), D = (5,7/2) | 39. 600.00 |
| 40. ரூபா 2688 | 41. i. 800 ii. 19.04% | 42. 8730.00 |
| 43. 2000.00 | 44. 4.7% | 45. i. ரூபா 25,000 |
| ii. ரூபா 475,000 | 46. ரூபா 900.00 | 47. ரூபா 45,000 |
| 48. 7.5% | 49. 14% | 50. 2ஆண்டுகள் |
| 51. 24% | 52. 1வருடம் | 53. ரூபா 1400000 |
| 54. ரூபா 162 | 55. ரூபா 3000 | 56. 8:5 |
| 57. கடை A | 58. ரூபா 16,000 | 59. 27 |
| 60. 1 | 61 5 | 62. $\frac{9}{2}$ |
| 63. 18 | 64 (-32) | |
| 65 $X^2 - 9$ | 66. $2p^2 + 5p + 2$ | 67. $x^2 + ax + bx + ab$ |
| 68. $x^2 + 10x + 21$ | 69 $5 (x - 25y) (x - 25y)$ | 70. $(a=x) (8 - x)$ |
| 71. $(11 + x) (1 + x^2)$ | 72. 15 | 73. $\frac{1}{25}$ |
| 74. ரூபா 14400 | 75. 3 | |
| 76. 59 | 77. 30 | 78. 2 |
| 79. 36km | 80. ரூபா 1128 | 81. ரூபா 55,200 |
| 82. 2 | 83. $\frac{X^9}{y^6}$ | 84. 1 |
| 85. 5 | | 86. 0 |
| 87. 3 | 88. $X \times y^2$ | 89. $xy^1$ |
| 90. $X^3 = -18$ | 91. $X^3 (8xy^3)$ | 92 $x = -18$ |
| 93. $X = -8$ | 94. $a = 2$ | 95. 7cm |
| 96. 22cm | 97. $Y = 3x$ | 98. i. 3 |
| ii. $y = 3x + 1$ | 99. i. -3 | ii. 2 |
| 100. 80km | 101. 3,4 | 102. ரூபா 112.50 |
| 103. $\frac{16}{9}$ | 104. $X = 9$ | 105. 10 |

## நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (01) 01. கட்டுரை | 02. 12345 | 03. i . 1 | ii. 2 | 04. 9000 |
| 05. 5126 | 06. i. 10 | ii. 10 வரை நிழற்றல் | | 07. 750ml |
| 08. 17cm | 09. ஏதேனும் | ஐந்து பெட்டிகளை நிழற்றல் | | |
| 10. ரூபா 4.75 | 11. 108 | 12. 2l 3000ml | | 13. 15நிமிடம் |
| 14. 1410 | (02) 15. 1 | 16. 2 | 17. 1 | 18. 2 |
| 19. 1 | 20. 4 | 21. 1 | 22. 1 | 23. 1 |
| | | | | 24. 2 |
| 25. 1 | 26. 1 | (03) 27. H | 28. K | 29. J |
| | | | | 30. L |
| 31. I | 32. G | 33. 1 | 34. 2 | 35. 1 |
| 36. 1 | 37. 1 | 38. 3 | 39. 2 | 40. |

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பிரசுரமாகும் க.பொ.த (சா/த) கணித வினாத்தாளுக்கான விடைகள் யாவும் அடுத்த வெள்ளிக்கிழமை பிரசுரமாகும்

### தேசியப்பட்டியலூடாக மகிந்தவைக் கொண்டுவர சதி

# ஜனாதிபதியின் குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்தார் சுசில்




(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தேசியப் பட்டியல ஊடாக நாடாளுமன்றத்துக்கு கொண்டுவர சதித்திட்டம் தீட்டப்பட்டதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் சுசில் பிரேமஜெயந்த நிராகரித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு கொண்டு வர திட்டம் தீட்டப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியிருந்தார்.

இது தொடர்பாக சுசில் கூறியதாவது:

மகிந்த ராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்திருக்க முடியாது.

ஏனென்றால், 1981ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் சட்டப்படி, தேசியப்பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களை அல்லது, குறித்த தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றவர்களையே தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க முடியும்.

ஆனால், 2010 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, தேரதல்கள் ஆணையாளருக்கு அனுபபிய தேசியப்பட்டியலில் மகிந்த ராஜபக்ஷவின் பெயர் இடம் பெற்றிருக்கவில்லை.

2010 நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் போட்டியிட்டிருக்கவில்லை. எனவே, 2015இல் அவரைத் தேசியப்பட்டியலின் மூலம் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வர முடியாது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியின் முதல் பிரசாரக் கூட்டத்தை எதிர்வரும் 17ஆம் திகதி அநுராதபுரத்தில் நடத்த கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இணங்கியுள்ளார்.

'ஐக்கிய மக்கள் சுதந்திர கூடடமைப்பின் சார்பில் 260 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நான், தினேஷ் குணவர்தன, அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்க இணக்கம் காணப்பட்டது'.

'தேர்தல் பிரசார நடவடிக்கை குழுவின் தலைவராக மகிந்த ராஜபக்ஷவை நியமிக்கவும் ஜனாதிபதி இணங்கினார். இதனடிப்படையில் அதனை கடந்த 3ஆம் திகதி மகிந்தவுக்கு அறிவித்தோம். ஐ.ம.சு.கூ.வின் இணக்கத்துக்கு அமையவே நான் அந்த அறிவிப்பை வெளியிட்டேன் என்றும் சுசில் கூறினார்.

பொதுப் பரீட்சைகள் நடைபெறும் போது தேர்தல்கள் நடத்தப்படுவதில்லை. எனினும், இம்முறை உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் போது பொதுத் தேர்தல் நடத்தப்படுகிறது.

பிரதமரை காப்பாற்றும் எண்ணத்தில், பிள்ளைகளின் எதிர் காலத்தை கவனத்திற்கொள்ளாது தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரை காப்பற்ற பிள்ளைகளின் எதிர் காலத்தை அடகு வைக்கும் அர சாங்கம் ஒன்றின் மூலமான எதிர்கால பலன் என்ன?' என அவர் கேள்வியெழுப்பினார்.

## வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?



### கன்னி

*[உத்தரம் 3, 4 / அத்தம், சித்திரை 1, 2]*

இராவணனின் முடியை வீழ்த்திய குரு 5/ 7/ 2016 வரை 12 இல் நிற்பதினால் சிலருக்கு மானபங்கமும் கௌரவக் குறைவும் ஏற்படும். சுபகாரியங்கள் நிகழ வாய்ப்புண்டு. பயணம் சிலசமயம் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்துவிடும். அரச அதிகாரிகளுடன் சுமுக உறவினைப் பேணுவதுடன் பிள்ளைகளின் தவறுகளை பவ்விய மான முறையில் திருத்துங்கள்.

ஏழரைச்சனி நீங்கி 3 ஆம் கோசர நிலையில் சனீஸ்வரன் நின்று வியாழனால் ஏற்படுகின்ற கெடு பலாபலன்களைப் போக்கிவிடுவார். புதிய விடயங்களில் கால்பதிக்கலாம்.

நீண்ட காலத்தின் பின்னர் சொந்த மண்ணை மிதித்தல் கடனை மீளப் பெற பொலிஸாரிடம் செல்ல நேரிடல். பாகுபாடு காட்டுவதினால் பெற்றோர் பிள்ளைகள் மத்தியில் பிரளயம் ஏற்படல். பொறுப்பின்றி எவருக்கும் உதவிட வேண்டாமென்று மனையாள் தடுத்துவிடல். இராகு கேது முறையே 9/ 1/ 2016 வரை 1 இல், 7 இல் நிற்பதும் பின் 1 1/ 2 ஆண்டுக்கு முறையே 12 ஆம், 6 ஆம் நிலைப்பாட்டில் நின்று அயலவருடன் ஏற்பட்ட முரண்பாட்டை விலகச் செய்தும், எதிரியின் அடாவடித்தனத்தை அற்றுப் போகவும் காசோலை மோசடிகள் கனகச்சிதமாக தலையணை மந்திரத்தால் பிளவினையும் தக்கவைக்கும்.

**ஜோதிர் வித்யா ரத்னா**
**சாமஸ்ரீ தேச மானிய**
**வி.ஏ.சிவராசா**
**(அரச விருது பெற்ற ஜோதிடர்)**



# களனி அமைப்பாளர் பதவி மேர்வின் சில்வா விலகல்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களனி தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் மூலம் அறிவித்துளளார்.

ராஜபக்ஷ குடும்பத்தின் சதித திட்டங்களுக்கு உள்ளாகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தற்போது கட்சியின் தலைவர் பதவியை வகிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மாத்திரமே மீட்டெடுக்க முடியும் என மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியை உயர்த்தி வைப்பதற்கு செயற்பட்ட சிலரும் பசில் ராஜபக்ஷவும் வேட்பு மனு வழங்கும் செயறபாட்டை தமது பொறுப்பில் எடுத்துச் செயற்பட்டமையினால் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மேர்வின் சில்வா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.



கூட்டமைப்பின் பொதுச் செயலாளரின் வீட்டில் நடைபெற்ற சந்திப்பிற்கு பசில் ராஜபக்ஷ சென்றிருந்தமையை இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் காணக்கிடைத்தமை அதற்கு சிறந்த உதாரணம் ஆகும்.

ராஜபக்ஷ குடும்பத்தினரை முன்னோக்கிக் கொண்டு வருவதற்காக செயற்பட்ட எமக்கு வேட்பு மனு வழங்காமல் விட்டமைக்கு எவ்வித காரணமும் இல்லை.

பசில் ராஜபக்ஷ மற்றும் கோததாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்தமையும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது களனி தொகுதியை தோல்வியடைச் செய்தமையும், அன்னச் சின்னத்தை வெற்றி பெறச் செய்வதற்காக செயற்பட்டமையும் இதற்குக் காரணம் ஆகும்.

இந்த அனைத்துக் காரணங்களையும் கருத்திற்கொண்டு களனி தொகுதியின் அமைப்பாளர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வதற்கு ஜனாதிபதியிடம் அனுமதி கோருகின்றேன்.

ராஜபக்ஷ குடும்பம் மற்றும் பல்வேறு கட்சிகளில் உள்ள சதித்திட்டக்காரர்களிடம் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்ட தினத்தில் நான் மீண்டும் அந்தப் பதவிக்கு வருகின்றேன்.

எனக்குச் செய்த அநீதிக்காக தற்போது தப்பித்தாலும் கடவுளிடம் இருந்து தப்பிக்க முடியாது என அவர் தனது கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மதுபானங்களை வழங்கி வாக்கு வேட்டை –கபே

(கொழும்பு)

வாக்காளர்களுக்கு போதைப் பொருள் மற்றும் மதுபானங்களை வழங்கி வாக்குகளை பெறறுக்கொள்ள முயற்சிப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்.

புத்தளம், பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இருந்து முறைப்பாடுகள் கிடைகப்பெற்றுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேர்தல் சட்டமூலத்தில் இலஞ்ச ஊழலை அதிகரித்தல் குற்றமாக கருதப்படுவதுடன், மதுவரி கடடளை சட்டத்தின் விதிகளை மீறும நடவடிக்கை எந்தவொரு வகையிலாவது பொருட்களை வழங்குதல் தேர்தல் சட்டத்தை மீறும் நடவடிக்கை என்பதுடன் இவ்வாறு மதுபானங்களை பெற்றுக கொடுப்பது அழுத்தங்களை பிரயோகிக்கும் நடவடிக்கையாகும்.

மதுபான வகைகளை இலவசமாக பெற்றுக்கொடுப்பதனால் அதிகமான வாக்காளர்களையும், ஆதரவாளர்களையும் தம்மிடம் ஈர்த்துக்கொள்ளும் வகையில் வேட்பாளர்கள் செயற்படுவது பிரயோக தேர்தலுக்கு முரணானது.

கபே அமைப்பு இந்தச் செயற்பாடுகள் குறித்து மதுவரித் திணைகளத்திற்கும், தேர்தல்கள் திணைகளத்திற்கும் முறைப்பாடு செய்துள்ளது.

அத்துடன் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினம் முதல் கபே அமைப்பிடம் இது வரையில் 244 முறைப்பாடுகள் கிடைகப்பெற்றுள்ளது, அவற் றில் 224 முறைப்பாடுகள் தேர் தல் சட்டத்தை மீறியமை தொடர்பிலும், மிகுதி 20 முறைப்பாடுகள் வன்முறைகள் தொடர்பிலும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர தெரிவித்துள்ளார்.

# மைத்திரியின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது

## விஜித ஹேரத் தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாட்டை எற்றுக் கொள்ள முடியாது என ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்ஷவிற்கு வேட்பு மனு வழங்கப்படுவதனை தாம் எதிர்த்ததாக ஜனாதிபதி கூறியிருந்தார்.எனினும், ஜனாதிபதியின் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

அவ்வளவு விடயங்களும் முடித்ததன் பின்னர் தொலைக் காட்சியில் தோன்றி மகிந்தவிற்கு வேட்பு மனு வழங்கப்படுவதனை தாம் எதிர்த்ததாக மைத்திரிபால சிறிசேன கூறுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஜனாதிபதி மைத்திரிபாலவின் நிலைப்பாட்டை மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாரிய பிழை ஒன்றை செய்து விட்டார் அதனை திருத்திக் கொள்ள காலம் கடந்து விட்டது.

பொதுத் தேர்தல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிக்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் இடையில் மூன்று சந்திப்புக்கள் நடைபெற்றுள்ளன. இந்தச் சந்திப்புக்களில் மூன்றாம் சந்திப்பு இரகசியமாக நடத்தப்பட்டது இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால இது வரையில் வாய் திறக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கம்பஹா மாவட்டத்தில் முன்னாள் அமைச்சர் சரண குணவர்தனவிற்கு வேட்பு மனு வழங்காது அவரது மனைவிக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளரிடம் பந்துல கோரிக்கை

முன்னாள் அமைச்சர்கள் மறறும் நாடாளுமன்ற உறுப்பினர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்த போது தாம் இந்தக் கோரிக்கையை முன்வைத்ததாக, பந்துல ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேரதல் முடிவடையும் காலம்வரை இதற்கென விஷேட திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டுமென அவர மேலும தெரிவித்தார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் முன்னாள் அமைச்சர்கள் மறறும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது, எதிரணியின் உறுப்பினர்கள் தொடர்ந்து பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். ஆனால தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் விஷேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பை பயன்படுத்தி வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈரான் அணுத்திட்ட உடன்படிக்கை

# ஐ.நா. பேரவையில் வாக்கெடுப்பு

United Nations

ஈரானுடனான அணுத்திட்ட உடன்படிக்கைக்கு ஒப்புதல் வழங்கும் வரைபு மீது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவையில் வாக்கெடுப்பு நடாத்தப்படவுள்ளது.

இந்த வாக்கெடுப்பு அடுத்த வாரம் நடாத்தப்படலாம் என இராஜதந்திரிகளை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் ஈரான் மீதான ஆயுத வர்த்தகம் மற்றும் பெலஸ்டிக் ஏவுகணை தொழில்நுட்ப தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானுடனான அணுத்திட்ட உடன்படிக்கைக்கு ஒப்புதல் வழங்கும் வரைபுத்தீர்மானம் தொடர்பில் ஐ.நா. பாதுகாப்பு பேரவையில் ஐ.நா.விற்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

தமது நாட்டின் அணுச்செறிவாக்கல் நடவடிக்கைக்கு ஐ.நா. பாதுகாப்பு பேரவை அடுத்த வாரம் அளவில் ஒப்புதல் வழங்கும் என ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஜாவிட் செரீப் கூறியுள்ளார்.

வியன்னாவில் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்து நாட்டை வந்தடைந்த அவர் தெஹ்ரான் விமான நிலையத்தில் வைத்து இதனைக் கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# இந்தியா – சீனாவில் 3 மாதத்தில் 360 தொன் தங்க நகைகள் விற்பனை



இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் இந்தியா மற்றும் சீனாவில் 360 தொன் தங்க நகைகள் விற்பனையாகியுள்ளதாக சர்வதேச தங்க சபை தெரிவித்துள்ளது.

சீனர்கள் 213.2 தொன் தங்க நகைகளையும், அதற்கு அடுத்தபடியாக இந்தியர்கள் 150.8 தொன் தங்க நகைகளையும் இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் வாங்கியுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இதே காலப்பகுதியில் சீனர்கள் வாங்கியிருந்த தங்கத்தின் அளவை விட இந்த ஆண்டின் விற்பனை சுமார் 10 சதவீதம் சரிந்துள்ளது.

எனினும், இந்தியர்களின் இந்த ஆண்டு கொள்முதல் 22 சதவீதம் உயர்ந்துள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனர்கள் மற்றும் இந்தியர்கள் அதிகமாக தங்கத்தை வாங்குவதனால் தங்கத்தின் சர்வதேச சந்தையின் விலையை நிர்ணயிபபதில் இந்த இரு நாடுகளின் கொள்முதல் திறன் முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் மட்டுமின்றி வளைகுடா நாடுகளிலும் தங்க நகைகளை வாங்குபவர்களில் இந்தியர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது என தெரிவிக்கபபடுகின்றது.

# ஆளில்லா விமானம் சுடப்படவில்லை இந்திய இராணுவம் தகவல்



பாகிஸ்தானை உளவு பார்க்க அனுப்பபப்பட்ட இந்திய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவம் கூறிய தகவலை இந்திய இராணுவம் மறுத்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் எல்லைக் கட்டுப்பாடு கோடு அருகே பிம்பர் பகுதியில் இந்தியாவின் ஆளில்லா உளவு விமானம் பறந்ததாகவும் அது சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனை மறுத்துள்ள இந்திய இராணுவம் பிம்பர் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட ஆளில்லா விமானம் இந்தியாவினுடையதல்ல என தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்க மறுத்துள்ள பாகிஸ்தானுக்கான இந்திய தூதர் ராகவன் பாகிஸ்தானின் தொடர் அத்துமீறல் ஏமாற்றம் அளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கான இந்திய தூதருக்கு அந்நாடு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

# மாசடைந்த நகரமாக இந்தியாவின் சென்னை



இந்தியாவிலேயே மிக மோசமாக மாசடைந்த நகரமாக சென்னை காணப்படுகின்றது என தகவல்கள் வெளியாகியுள்ளன. உலகளவிலும் மாசடைந்த நகரங்கள் பட்டியலில் சென்னை இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடசென்னையில் தொழிற்சாலைகளால் மாசு ஏற்படும் அதே நேரம், தற்போது கட்டுமானப்பணி மற்றும் போக்குவரத்து நெரிசலால் தென்சென்னை உட்பட மொத்த நகரமும் மாசடைந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒவ்வொரு நாளும் சென்னையில் 700 புதிய வாகனங்கள் சாலையில் ஓடுவதாகவும், இதனால் இந்தியத்தலைநகர் டில்லியை விட மிகவும் மாசடைந்த நகரமாக சென்னை உருவாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சென்னையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் போது வாகனங்கள் ஊர்ந்து செல்வதால் வெளியிடப்படும் புகையில் கலந்துள்ள கார்பன் மோனக்சைட் மற்றும் சல்பைட்டை ஆக்சைட் ஆகியவை காற்றுடன் கலந்து மக்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றது.

அதிகம் மாசடைந்த நகரமாக சென்னை மாறியதில் பெரும் பங்கு மெட்ரோ ரயில் கட்டுமான பணிகளுக்கு உண்டு எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த பணிகள் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு தொடரும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விமானியின் சாதுர்யத்தால் உயிர் பிழைத்தார் மன்மோகன்

(புதுடில்லி)

விமானியின் சாதுர்ய நடவடிக்கையால் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

ஏர் இந்தியா விமான நிறுவனத்துக்கு சொந்தமான போயிங் 787 ரக விமானம் கடந்த 12 ஆம் திகதி அமிர்தசரஸில் இருந்து டெல்லிக்குச் சென்றது. அந்த விமானத்தில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கும் பயணம் செய்தார்.

ஓடுபாதையில் இருந்து விமானம் மேலே எழும்பிய சிறிது நேரத்தில், அதன் சக்கரங்கள் செயற்படாமல் இருப்பதை விமானி கண்டறிந்தார்.

இதனால் அதிர்ச்சியடைந்த அவர், ஆபத்துகால நெறிமுறையின் புடி சாதுர்யமாக செயற்பட்டு, டில்லியில் விமானத்தை பத்திரமாக தரையிறக்கினார். இதனால் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் உட்பட அந்த விமானத்தில் பயணம் செய்த அனைவரும் உயிர்தப்பியுள்ளனர்.

போயிங் ரக விமானத்தில் இதுபோன்ற தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டால் விமானம் 20 ஆயிரம் அடிக்கு மேல் பறக்க முடியாது என்று மூத்த விமானிகள் தெரிவித்தனர்.

குறைந்த தூர பயணம் என்பதால், எந்த பிரச்சனையும் இன்றி டில்லியில் தரையிறக்க முடிந்ததாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

# நீர்மூழ்கி கப்பல் கொள்வனவு இடை நிறுத்தியது தாய்லாந்து



அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடாக தாய்லாந்து பல்லாண்டு காலமாக உள்ள நிலையில் கடந்த ஆண்டு தாய்லாந்தில் நடந்த ஆட்சிக்கவிழ்ப்புக்கு பின்னர், அந்த நாட்டுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இந்த நிலையில், சீனாவிடம் இருந்து ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில் (சுமார் ரூ.6,400 கோடி), 3 நீர் மூழ்கி கப்பல்களை வாங்குவதாக தாய்லாந்து உறுதி அளித்திருந்தது.

அந்த பிராந்தியத்தில் சீனா உட்கட்டுமான வசதிகளுக்கு உதவுதல், கடன் வழங்குதல் என தனது செல்வாக்கை வளர்த்து வருகிறது. அதன் காரணமாகவே இப்போது அந்த நாட்டுடன் தளாய்லாந்து நட்பினை வளர்த்து வருகிறது.

ஆனால் திடீரென சீனாவிடம் இருந்து 3 நீர்மூழ்கி கப்பல் வாங்கும் திட்டத்தை தாய்லாந்து நிறுத்தி வைத்து விட்டது. இது பற்றி அந்த நாட்டின் இராணுவ அமைச்சர் பிராவிட் வாங்சுவான் கூறுகையில், 'எங்கள் கடலோர பகுதிகளில் நர்மூழ்கி கப்பல்களின் பங்களிப்பு,அவற்றின் விலை தொடர்பாக கடற்படை மறுபரிசீலனை செய்கிறது. இப்போது பொறுத்திருப்போம். நீர்மூழ்கி கப்பல் கொள்முதல் திட்டத்தை ஒப்புதலுக்காக அமைச்சரவைக்கு அனுப்பப்போவதில்லை' என்றார்.இது சீனாவுக்கு அதிர்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது.

# பிலிப்பைன்ஸ் கப்பலை அகற்ற வலியுறுத்தும் சீனா



சர்ச்சைக்குரிய தென்சீனக் கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டுள்ள இராணுவத் தளமாக பயன்படுத்தப்பட்ட பிலிப்பைன்ஸ் கப்பலை அங்கிருந்து அகற்றுமாறு சீனா வலியுறுத்தியுள்ளது.

சீனா உரிமை கோரும் பகுதியில் நங்கூரமிடப்பட்டுள்ள சியாரோ மெடா என்ற குறித்த கப்பலில் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிலிப்பைன்ஸ் கூறியுள்ளது.

அத்துடன் சூபீக் வளைகுடாவிலுள்ள முன்னாள் அமெரிக்க தளம் தொடர்பிலும் மீளாய்வு செய்வதற்கு பிலிப்பைன்ஸ் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நில மீட்பு செயற்பாடு மற்றும் கடலிலுள்ள திட்டுகளில் நிர்மாணங்களை சீனா மேற்கொண்டு வருகின்றமையால் அயல்நாடுகள் கடுமையான ஆத்திரத்தை வெளியிட் டுள்ளன.

இதேவேளை அனைத்து நில மீட்பு நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளதுடன் இது போன்ற செயற்பாடுகள் பிராந்தியத்தில் பதற்றத்தை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டியுள்ளது.

தென்சீனக் கடற்பரப்பில் சீனாவின் உரிமை கோரல் செயற்பாட்டுக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மத்தியஸ்த விசேட நீதிமன்றத்தில் பிலிப்பைன்ஸ் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனித உரிமை பேணல் இன்னும் திருப்தியாக இல்லை

## பிரித்தானியா கவலை

(கொழும்பு)

இலங்கையில் 2015 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், மனித உரிமைகள் நிலைமையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், சில கவலைக்குரிய விடயங்கள் தொடர்வதாக பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் நடந்த அதிபர் தேர்தலை அடுத்து, பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள், ஜனநாயகம் குறித்த கரிசனைகளுக்குத் தீர்வு காணும் வகையிலான சாதகமான சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் முன்னேற்றமடைந்துள்ளதுடன், புலம்பெயர்ந்த ஊடகவியலாளர்களையும் திரும்பி வருமாறு அழைப்பு விடுத்துள்ளது. சில இணையத்தளங்கள் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டவர்கள் வடக்கிற்குச் செல்வதற்கான தடையும், அரசசார்பற்ற நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு ஜனநாயக வெளி திறந்து விடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் படையினரின் கண்காணிப்பு குறைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், உயர்ந்தளவு இராணுவ மயமாக்கல், பொதுமக்களின் வாழ்வில் இராணுவத் தலையீடுகள், ஆயுதப் படைகளால் தொடர்ந்து காணிகள் அபகரிக்கப்படுதல் போன்ற சவாலான விடயங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

பெண்களின் பாதுகாப்பு மற்றும் ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்படுதல் என்பன கவலைக்குரிய விடயங்களாகவே உள்ளன.

போரின் போது, படைகளிடம் சரணடைந்து காணாமற்போனதாக குற்றம்சாட்டப்படும் முன்னாள் போராளிகள் உள்ளிட்ட காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகளில் எந்த முன்னேற்றமும் இல்லை.

இரகசியத் தடுப்பு முகாம்கள் இயங்குவதாக தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர். ஆனால் அதிகாரிகள் அதனை நிராகரிக்கின்றனர்.

முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறைந்துள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் வன்முறையை முறையிட முகப்புத்தகம்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் ஆணையாளருக்கு தெரிவிக்கும் முகமாக முகப்புத்தகக் கணக்கொன்றை தேர்தல்கள் ஆணையாளர் திறந்துள்ளார்.

'ஆணையாளருக்கு கூறுங்கள்' எனும் பெயரில் இந்த முகப்புத்தகக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த முகப்புத்தகக் கணக்கில் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் சட்டங்கள் மீறப்படும் விதிமுறைகள் குறித்தும் அறிந்து கொள்ள முடியுமென தேர்தல்கள் திணைக்களத்தின் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

முகப்புத்தகமானது மக்கள் மத்தியில் மிகவும் வேகமாகப் பரவி, தாக்கத்தை ஏற்படுத்துவதனாலேயே தேர்தல்கள் ஆணையாளர் இந்த முகப்புத்தக கணக்கை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் விபத்து ஸ்தலத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

மன்னாரில் தனியார் பஸ் ஒன்றின் சில்லில் தலை நசியுண்ட ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் மன்னார் தனியார் பேருந்து தரிப்பிடத்தில் இடம் பெற்றுள்ளது.

மன்னார் சாவற்கட்டைச் சேர்ந்தவரும் மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளராக கடமையாற்றும் பஞ்சநாதன் (வயது - 49) என்ற குடும்பஸ்தரே இந்த விபத்தில் உயிரிழந்தார். தனியார் பஸ், தரிப்பிட பகுதிக்கு வந்த போது பஸ்ஸின் பின்புறம் இவர் தள்ளாடிய நிலையில் கீழே விழுந்தார் எனவும் இதன்போது அவரின் தலை மீது பஸ் ஏறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பொலிஸார் தனியார் பஸ்ஸின் சாரதியைக் கைதுசெய்தனர். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# மகிந்தவின் எழுச்சிக்கே சிவாஜிலிங்கம் களம் குதிப்பு

## கண்டிக்கிறார் ஸ்ரீரங்கேஸ்வரன்

மீண்டும் கூலி வேட்பாளராக கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் சுயேட்சை குழுவாக போட்டியிடுவதாக மக்களை வழமைபோல் ஏமாற்றிச் சம்பாதிக்கத் தொடங்கியுள்ளார் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரும் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வீணைச் சின்னத்தில் களம் இறங்கியுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்ட ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் உடுப்பிட்டி மற்றும் பருத்தித்துறைத் தொகுதி கிராமியச் செயற்பாட்டாளர்களுடன் நேற்று புலோலியிலுள்ள கட்சியின் பிரதேச அரசியல் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தலில் சொந்த இடத்திலேயே வாக்குப் பெற முடியாமல் வக்கற்றுப் போனவர்தான் இந்த சிவாஜிலிங்கம். கடந்த 2010 ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான வாக்குக்கள் சரத்பொன்சேகாவிற்கு தமிழ் மக்கள் அளிப்பார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட சிவாஜிலிங்கம், நான் அவ்வாறான தமிழர்களின் வாக்குக்களை சரத்பொன்சேகாவிற்கு செல்லாமல் தடுப்பேன் எனவும் அதற்காக எனக்கு மூன்று கோடி ரூபா கூலி தர வேண்டும் என பெற்றுக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக வருவதற்கு முண்டு கொடுத்த அதே சிவாஜிலிங்கம் தற்போது குருநாகலில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷவிடம் பலகோடி ரூபாய்களை கூலியாகப் பெற்றுக் கொண்டு குருநாகலில் போட்டியிடுகிறாராம்.

ஏனெனின் இத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் மகிந்த ர்ராஜபக்ஷவை அதிகூடிய விருப்பு வாக்கில் நாடாளுமன்ற உறுப்பினராக்க உறுதிகொண்டுள்ளாராம். அதற்காக சுயேட்சைக் குழுவாக களம் இறங்கியுள்ளார். இதில் வேடிக்கை என்னவென்றால் அக்குழுவில் போட்டியிடுவதாக கூறப்படும் நபர்கள் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை.

வல்வெட்டித்துறை நகரசபையின் செயற்பாடுகளை முடக்கியவர்களில் பிரதானமானவர்களில் இவரும் ஒருவர். அத்துடன் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் வல்வை நகரசபைத் தலைவர் நடராசா அனந்தராஜுக்கு எதிராக தற்போது வல்வெட்டித்துறையில் பிரசார நடவடிக்கைகளில் பகிரங்கமாக இறங்கியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தர் தோல்வியடைந்த பின்னர் தனது சொந்த ஊரான அம்பாந்தோட்டை மெதமுல்ல கிராமத்தில் மக்களிடத்தில் பேசும் போது நான் சிறுபான்மைத் தமிழர்களால் தோற்கடிக்கப்பட்டுள்ளேன் எனத் தெரிவித்திருந்தார்.

அதன் மூலம் மகிந்தவை நாடாளுமன்ற உறுப்பினராக்குவதே சிவாஜிலிங்கத்தின் உண்மையான திட்டம் என்றார்.

# பிரசாரத்துக்கு இடையூறு; சுசில் சுமத்தும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களை பொலிஸ விசேட நிதி மோசடி பிரிவிற்கு விசாரணைக்கு அழைத்து தேர்தல் பிரசாரத்திற்கு இடையூறு ஏற்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.



தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்து இது தொடர்பில் விளக்கம் அளித்ததாகவும் தேர்தலுக்குப் பின் அழைத்து விசாரணை நடத்தினால் பிரச்சினை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமது முன்னணியின் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு அகற்றப்பட்டுள்ளதாகவும் அண்மையில் டளஸ் அழகப்பெருமவிற்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் சுசில் சுட்டிக்காட்டினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் புதிய வானொலி தொடங்கப்பட்டு ஐக்கிய மக்கள் முன்னணிக்கு எதிராக செயற்படத் தொடங்கியுள்ளதாகவும் இது தொடர்பில் குரல் பதிவுகளுடன் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தலில் அரச சொத்துக்கள் முறைக்கேடாக பயன்படுத்தப்படுவதாகவும் இளைஞர் விவகார அமைச்சுக்கு சொந்தமான 52 வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த முறைப்பாடுகள் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளதாக சுசில் பிரேமஜயந்த கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

## மனித நேயம்...

செல்வார்கள் என்றும் தெரிவித்தார்.

எமது மக்களை அவர்களது சொந்தக் கால்களில் கௌரவமாக வாழவைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே கடந்த காலங்களில் நாம் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளோம். அதேபோன்று, எதிர்காலத்திலும் தொடரவுள்ளோம்.

ஏனைய அரசியல்வாதிகளைப் போன்று நடைமுறைச்சாத்தியமற்றதும் உண்மையற்றதுமான அரசியலை நாம் ஒருபோதும் முன்னெடுத்ததில்லை. மாறாக, உண்மையானதும், நேர்மையானதும், நடைமுறைச்சாத்தியமானதுமான அரசியலையே இன்றும் என்றென்றும் முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

அந்த வகையில், உண்மையான, நேர்மையான மனிதநேயத்தைத் தான் எமது அரசியல் மூலதனமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம் என்றும் தெரிவித்த ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம், நாம் என்றென்றும் மக்களுடன் நின்று மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காண்பதுடன், அதற்கான ஆணையையும் உரிமையுடன் வேண்டி நிற்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

இதன்போது ஏனைய வேட்பாளர்களான யாழ். மாநகர முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் ஆகியோர் உடனிருந்தனர்.

## சீன கடன்...

ஆகியவற்றிடம் இருந்தே சீனாவின் கடன்களை அடைப்பதற்கான குறைந்த வட்டியிலான நீண்டகாலக் கடன்களைப் பெற முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாக நிதி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மத்திய...

என்ற அடிப்படையில் ஜனாதிபதி தாக்கல் செய்த மனுவின் மூலம் அந்த செயற்குழு கூட்டத்திற்கு தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள் நேற்று முன்தினம் இரவு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அதன்போது மத்திய செயற்குழுவை கூட்டுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க தீர்மானித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழு உறுப்பினர்கள் பலர் கைச்சாத்திட்டு ஜனாதிபதியிடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளனர்.

## அமெரிக்க...

இந்த வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்கள் பணியில் ஈடுபடவுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம், கொமன்வெல்த், சார்க் கண்காணிப்புக் குழுக்களே தேர்தல் கண்காணிப்பை மேற்கொள்ளவுள்ளன.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல்கள் ஆணையம், கொமன்வெல்த் தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகள், தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அதிகாரிகள் அமைப்பு ஆகியவற்றைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் தமது வருகையை உறுதிப்படுத்தியுள்ளனர்.


கொழும்பு வரவுள்ள ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் 8 தேர்தல் பகுப்பாய்வாளர்கள் மற்றும் 18 நீண்டகால பார்வையாளர்கள் அனைத்து மாகாணங்களிலும் பணியில் ஈடுபடவுள்ளனர்.

அதேவேளை, 28 குறுங்கால பார்வையாளர்கள் தேர்தலை அண்டிய நாட்களில் அனைத்து மாவட்டங்களிலும் பணியில் ஈடுபடுவர்.

அதேவேளை, இந்த தேர்தலை கண்காணிக்க அமெரிக்க கண்காணிப்பாளர்களும் வரவுள்ளதாக முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், அமெரிக்க கண்காணிப்பாளர்களுக்கு கொழும்பில் இருந்து அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# ஊழல்களை அம்பலமாக்குவேன்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பல்வேறு ஊழல் மோசடிகள் தொடர்பிலான தகவல்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மூன்று மாத காலப்பகுதியில் கடந்த அரசாங்கத்தின் மோசடிகள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பதவி வகித்தவர்கள் எதற்காக விசாரணைகளை கண்டு அஞ்ச வேண்டுமெனவும் குற்றம் செய்யாதிருந்தால் விசாரணைகளுக்கு முகம் கொடுக்க முடியும் தானே எனவும் அவுர் குறிப்பிட்டுள்ளார்.


வாழ்வாதாரமாக சங்கிலி திருடியவர்கள் இன்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்றத்தேர்தல் வேட்பாளர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தேர்தலில் போட்டியிடுவதனை தவிர்க்க ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் பாரியளவு வெற்றிடங்கள் காணப்பட்டதாகவும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் முக்கியமான நிறுவனங்களான சட்ட மா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு போன்றனவற்றை அரசியல் பிடியிலிருந்து முழுமையாக விடுவிக்கச் செய்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் மகிந்த ராஜபக்ஷவின் எதிர்காலத்தை மட்டுமன்றி நாட்டு மக்களின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும் தேர்தலாக அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# பிரித்தானிய தூதரக அதிகாரி வடக்கிற்கு விஜயம்



(முல்லைத்தீவு)

இலங்கைக்கான பிரித்தானியா தூதரகத்தின் அரசியல் செயலாளர் டோம் சோபருக்கும் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கும் இடையில் நேற்று முல்லைத்தீவில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவில் வடமாகாண சபை உறுப்பினரின் இல்லத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னரான அரசியல் சூழல், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பற்றிய பார்வை, தமிழர் தாயகத்தில் இனப்பரம்பல் கோலத்தை மாற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் , தமிழ் இளைஞர்கள் மீது திணிக்கப்படும் புலம்பெயரும் நிர்ப்பந்தம்,

சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் மத அடையாளங்களை திணிக்கும் நடவடிக்கைகள், தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய கடற்றொழில் நடவடிக்கைகள் உள்ளடங்கலாக பல விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதாக ரவிகரன் தெரிவித்தார்.

# வெலேசுதா விடுதலை சாத்தியமா?

(கொழும்பு)

சமந்தகுமார என்ற வெலே சுதாவிற்கு எதிராக விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க கால அவகாசம் வழங்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டத்தரணி இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

வழக்குடன் தொடர்புடைய பொலிஸ் விசாரணை அறிக்கை காணாமற தொலைந்து போயுள்ளதால் வழக்கு விசாரணையை முன்னெடுத்துச் செல்ல முடியாது என ஏற்கனவே நீதிமன்றில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் சந்தேகநபரான வெலே சுதாவை விடுதலை செய்யுமாறு சட்டத்தரணி நீதிமன்றில் கோரியுள்ளார்.

எனினும் இந்தக் கோரிக்கை தொடர்பில் ஆய்வு செய்ய கால அவகாசம் தேவை என அரச சட்டத்தரணி கூறியுள்ளார்.

இக்கருத்துக்களை பரிசீலித்த நீதிமன்றம் வழக்கினை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் அன்றைய தினம் சட்டமா அதிபர் தனது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

# பொலிஸ் அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

கலவானி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட அதிகாரிகள் இருவர் உடன் அமுலுக்கு வரும் வகையில் வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைச் சம்பவம் ஒன்று குறித்து முறைப்பாடு செய்ய கலவானி பொலிஸுக்கு இரு குழுக்கள் வருகை தந்துள்ளனர். இதன்பொது பொலிஸில் இரு குழுக்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

இதனை கடமையில் இருந்த பொலிஸார் தடுக்க முடியுமாக இருந்தும் நடவடிக்கை எடுக்காததனால் இந்த வேலை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் பேச்சாளர் மேலும் கூறினார்.


# இலத்திரனியல் சேவை

(கொழும்பு)

இலங்கை சுங்கத் திணைக்களத்தினர் 24 மணித்தியால இலத் திரனியல் கட்டண இணையத்தள முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்த முறைமையானது, வரத்தில் 7 நாட்களும் செயற்படுத்தப் படவுள்ளதாக சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# புளூட்டோவின் ஐஸ்மலை




புளூட்டோவின் மேற்பரப்பில் பெரிய ஐஸ் மலைகளும் பூமியில் இருப்பதைப் போன்றே ஆழமான செங்குத்தான பள்ளத்தாக்குகளும் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நாஸாவின் நியூ ஹொரைஸன் ஆய்வுக் கலன் அண்மையில் எடுத்திருந்த இந்தப் புகைப்படங்களில் புளூட்டோவின் துணைக்கோளான சரொனிலும் ஆழமான பள்ளம் ஒன்று இருப்பது தெரியவந்துள்ளது.

# நல்லூர்த்திருவிழாவை முன்னிட்டு நாடக விழா

(நல்லூர்)

செயற்றிறன் அரங்கம் வருடாந்தம் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நடாத்துகின்ற நல்லூர் நாடக விழா இம்முறை பிரமாண்டமான அளவில் நடாத்தப்படவுள்ளது. ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ச்சியாக பத்து நாட்கள் இந்த விழா நடைபெறவுள்ளது. இதில் நவீன நாடகங்கள், சிறுவர் நாடகங்கள் மற்றும் பாரம்பரிய நாடகங்கள் என இருபதிற்கு மேற்பட்ட நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

ஒவ்வொரு நாடகங்களும் தலா 45 நிமிட ஆற்றுகை நேரத்தைக் கொண்டவையாக திட்டமிடப்படுகின்றன. நல்லூர் முதலாம் குறுக்கு வீதி பாணன் குளத்தடியில் அமைந்துள்ள திறந்த வெளி அரங்கில் மாலை 6.45 மணிக்கு விழா ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நாடக ஆர்வலர்களுக்கு பெருவிருந்தாக அமையவுள்ள இந்த நாடக விழாவை பார்வையாளர்கள் இலவசமாக கண்டுகளிக்க முடியும்.

பிரமாண்டமான ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நாடக விழாவில் இம்முறை பாரம்பரிய நாடகக் குழுக்கள் தமது நாடகங்களை மேடையேற்ற வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

45 நிமிடங்களுக்கு ஆற்றுகை செய்யக்கூடிய பாரம்பரிய நாடகங்களான நாட்டுக்கூத்துக்கள், காத்தவராயன்கூத்து, இசை நாடகங்கள் மற்றும் பாரம்பரிய நடன வடிவங்களை ஆற்றுகை செய்ய விரும்புபவர்கள் அதற்காக விண்ணப்பிக்கலாம் எனவும், தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க முடியும் எனவும், இதற்கான மேலதிக விபரங்களுக்கு 0212216061 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லோட்ஸில் ஆஸி. பலம்

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான லோட்ஸ் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி பலமான நிலையைப் பெற்றுள்ளது. இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் அவுஸ்ரேலிய அணி நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவடைய 3 ஓவர்கள் இருக்கையில் ஒரு விக்கெட்டை இழந்து 327 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ரோஜர்ஸ் 151, ஸ்ரீபன் ஸ்மித் 127 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## விஞ்ஞான பீடம்

விஞ்ஞானத்தில் பொதுப் பட்டத் தேர்வு - 2014 நிலை 1G,2G,3G

கணனி விஞ்ஞான பட்டத் தேர்வு - 2014 நிலை 1S, 2S, 3S, 4S

விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டத் தேர்வு - 2014 நிலை 3M,4M

## முதலாம் அரையாண்டு கற்கை நெறி இறுதித்தேர்வு

முதலாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கை நெறி அலகுகளுக்கான கற்கை நெறி இறுதித் தேர்வுகள் (end of course Examinations) ஆவணி 2015இல் ஆரம்பமாகும்.

இவ்வலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப்படிவங்களை தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் 2015 ஆடி 29 ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

16-07-2015 (C/3878) பதிவாளர்


இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.